மாநகர சபை, யாழ்ப்பாணம்,

பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 29 புதன்கிழமை (11.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 197

## அரசு பேச்சுக்குத் தயாராக இல்லை

# எமது பகுதியைக் கைப்பற்ற முயன்றால் விபரீதம் விளையும்!



## புலித்தேவன் ரோய்ட்டருக்குச் செவ்வி

★ இலங்கை அரசாங்கம் அமைதிப் பேச்சுக்குத் தயாராக இல்லை. அமைதிப் பேச்சு நடைபெற வேண்டுமெனின், முதலில் அனுசரணையாளர்களான நோர்வேயுடன் நாம் கலந்துரையாட வேண்டும். ஆனால் அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்குவதாக இல்லை.

★ போரில் பாதுகாப்புப் படையினர் ஏற்கனவே பலத்த உயிரிழப்புகளைச் சந்தித்து வருகின்றனர். விடுதலைப்புலிகளின் பகுதிக்குள் அரசபடைகள் ஓர் அங்குலமேனும் காலடிஎடுத்து வைத்தால் மேலும் உயிரிழப்புகள் ஏற்படும் - பெரும் விபரீதம் விளையும்.

"ரோய்ட்டர்" செய்திச் சேவைக்கு தொலைபேசி மூலம் நேற்று வழங்கிய செவ்வியில் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் சீவரத்தினம் புலித்தேவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைதிப் பேச்சுக்களைப் பொறுத்த வரையில் நாம் முதலில் நோர்வே அனுசரணை யாளர்களுடன் ஆலோசனை நடத்த வேண்டியுள்ளது. அவர்கள் என்ன கருதுகின்றனர் என்பதனை நாம் அறிய வேண்டியுள்ளது. ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கம் அதற்கு தயாராக இல்லை. அதுதான் பிரச்சினை. நாம் நோர்வே தரப்பினரிடம் நேரடியாக பேச வேண்டியது முக்கியமானது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.கரையோரப் பகுதிகளில் ஷெல்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்.நகரக் கடற்கரையோரப் பகுதிகளில் நேற்று நண்பகல் 12மணியளவில் ஷெல்கள் வந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ் பெண் டாக்டர் தம்புள்ளையில் கைது

கொழும்பு, ஜூன்11

தகவல் ஒன்றின் அடிப்படையில் இளம் பெண்ணான தமிழ் டாக்டர் ஒருவரை கண்டியிலிருந்து சென்ற இரகசியப் பொலிஸார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கைக் குண்டுத் தாக்குதல்களுக்கு 'எல்லாளன் படை அணி' உரிமை கோருகின்றது

கொழும்பு, ஜூன் 11

கொழும்பிலும் தென்னிலங்கையிலும் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்கு 'எல்லாளன் படை அணி' என்ற அமைப்பு உரிமை கோரியிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் சில தகவல் வெளியிட்டிருக்கின்றன.

ஆழ ஊடுருவும் படையணியைப் பயன்படுத்தியும், விமானத்தாக்குதல்கள் மூலமாகவும் அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்வதற்குப் பதிலடியாகவே இந்தக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கௌ்ளப்படுகின்றன என அந்த 'எல்லாளன் படை அணி' தெரிவித்திருக்கின்றதாம்.

'ரோய்ட்டர்' செய்திச் சேவைக்கு அனுப்பிவைத்துள்ள மின்னஞ்சல் அறிக்கையிலும் எல்லாளன் படை அணி இதனைத் தெரிவித்துள்ளது என அந்தச் செய்திச் சேவை தகவல் வெளியிட்டிருக்கின்றது.

"போக்குவரத்து வாகனங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளுக்கும் ஏனைய தாக்குதல்களுக்கும் நாங்களே காரணம் என நாங்கள் உரிமை கோர விரும்புகின்றோம்." - என எல்லாளன் படை தெரிவித்துள்ளது.

அரசபடையினரால் ஆழ ஊடுருவியும், விமானங்களைப் பயன்படுத்தியும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது மேற்கௌ்ளப்படும் தாக்குதல்களுக்கான கடுமையான பதிலாகவே இந்தத் தாக்குதல்களைத் தாங்கள் மேற்கொள்கின்றனர் என எல்லாளன் படை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச பாடசாலைகள் அனைத்தையும் இன்றும் நாளையும் மூட அரசு முடிவு

கொழும்பு,ஜூன்.11

நாட்டிலுள்ள அனைத்து அரச பாடசாலைகளும் இன்றும், நாளையும் மூடப்பட்டிருக்கும் என்று கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது.

இன்றும், நாளையும் அரச பாடசாலைகளின் ஆசிரியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளமையை அடுத்தே இந்தத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர்கள், ஆசிரியர்கள் சம்பள விடயத்தில் மாற்றம் செய்ய கொள்கையளவில் இணக்கம்

கொழும்பு, ஜூன் 11

அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் குறித்து நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது அவர்களது சம்பளத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென கொள்கையளவில் உடன்பாடு காணப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் சில தீர்மானங்கள் குறித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சியில் தாழப்பறந்த விமானங்கள் பீதியடைந்த மக்கள் பாதுகாப்புத் தேடினர்!

யாழ்ப்பாணம் ,ஜூன். 11

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று காலை நான்கு கிபிர் விமானங்கள் தாழப் பறந்து சென்றதால் பொதுமக்கள் பீதியடைந்தனர்.

நேற்றுக் காலை 8மணிக்கு விமானங்கள் பயங்கர இரைச்சலுடன் சென்றதால் மக்கள் வீடுகளிலிருந்து வெளியே வந்து பாதுகாப்புத் தேடினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் பிரதமருடன் ஜனாதிபதி மஹிந்த பேச்சு

கொழும்பு, ஜூன் 11

பொதுநலவாய தலைவர்களின் மாநாட்டிற்காக பிரிட்டனிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுணைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

லண்டனின் டவுனிங் வீதியில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, இலங்கை வெளிவிவகாரஅமைச்சர் ரோஹித போகொல்லாகமவும் கலந்து கொண்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு எமது நன்றி

எமது தலைமை நிறுவனம் பதின்மூன்றாம் ஆண்டிலும் கிளை நிறுவனம் இரண்டாவது ஆண்டிலும் காலடி பதிக்கும் இந் நன்னாளில் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீகரன் புக்சென்ரர்

ஸ்ரேசன் வீதி, சுன்னாகம். கிளை: கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

கொழும்பிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்படும் காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் அனைத்தையும் எம்மிடம் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமி மீது துஷ்பிரயோகம் புரிந்த இளைஞருக்கு 10வருடச் சிறை!

## தப்பி ஓடியதால் பகிரங்க பிடியாணை!!

யாழ்ப்பாணம்,ஜூன் 11

சிறுமி ஒருத்தியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் நபர் ஒரு வருக்கு பத்துவருட கடூழியச் சிறை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 10ஆயிரம் ரூபா அபராதமும் 20ஆயிரம் ரூபா நஷ்ட ஈடும் செலுத்து வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்.இராசாவின் தோட்டவீதியைச் சேர்ந்த இராசையா ஆனந்தராசா அல்லது லோ கேஸ் என்ற நபருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் இத் தண்டனையை வழங்கினார்.

மேற்படி நபர் வவுனியா, சிதம்பரபுரத்தில் வசித்தபோதே இக் குற்றச்செயலை மேற் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட குற்றவாளி சுகவீன முற்று அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் அங்கிருந்து தப்பி ஓடி விட்டார் என்றும் -

இவரைக் கைது செய்வதற்கு வவுனியா மேல் நீதிமன்றம் பகிரங்க பிடியாணை பிறப்பித்துள்ளது என்றும்- அறிவிக்கப் படுகிறது. (அ-02)

# ஜயலத்துக்கு உரிய பாதுகாப்பு வழங்க நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜூன் 11

ஐ.தே.கட்சி எம்.பியான ஜயலத் ஜயவர்த்தனவுக்கு உரிய பாதுகாப்பு வழங்கவும், அதற்காக மேலதிக ஜீப், பொலிஸ், சாரதிகள் இருவர் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

தமக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவிடக் கோரி ஜயலத் ஜயவர்த்தன எம்.பி. தாக்கல் செய்த மனுவைப் பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப்பொலிஸ் மா அதிபருக்கு நேற்று வழங்கியது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா, உபாலி அபேரத்ன ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவை விடுத்தது.

2001 முதல் தமக்கு வழங்கப்பட்டு வந்த இந்தப் பாதுகாப்பு 2004 இல் ஆட்சிக்கு வந்த அரசினால் விலக்கப்பட்டது என்று தெரிவித்து ஜயலத் ஜயவர்த்தனா தாக்கல் செய்திருந்த இந்த மனு வின் மீது மூன்று வருட விசாரணையின் பின் இப்போது தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஒவ்வொரு பிரஜைக்கும் உரிய பாதுகாப்பை அளிப்பது அரசின் கடமை என்றும் நீதியரசர் கள் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளனர். (சி)

# நல்லூரில் விபத்து; 19 பேர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூன் 11

நல்லூர் ஆலயப் பின்வீதியில் நேற்று நண்பகல் 1.30 மணிக்கு யாழ்.மாநகரசபையின் உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானதில் மாநகரசபையின் 19 ஊழியர்கள் காயமடைந்து யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்நகரப்பகுதியில் இருந்து உழவு இயந்திரத்தில் அவர்கள் மாநகர சபை அலுவலகத்துக்கு சென்றுகொண்டிருந்தனர். ஆலய பின்வீதியில் உழவுஇயந்திரம்விபத்துக்குள்ளானதில்அவர்கள்காயமடைந்தனர்.

காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

ஜீ.சகாயகுமாரி (வயது 44), என் சந்திரன் (வயது 40), எம் ராஜன் (வயது 54), கே..அரியதாஸ் (வயது 55), ஜீ.ஜேசுராஜா (வயது 49), ஏ.திரேசம்மா (வயது 48), ரி.ஜேன்சன் (வயது 30), ஏ.நாகேஸ்வரி (வயது 49), எம் சகாயராஜா (வயது 36), ஆர்.சறோஜா (வயது 54), பி.றொபின் (வயது 37), எல்.றீற்றம்மா (வயது 57), எம் ராமையா (வயது 47), சிவாலிங்கம் (வயது 43), எஸ்.பிரான்சிஸ் (வயது 40),ஏ. நாகேஸ்வரி (வயது 42), எஸ்.புவனேஸ்வரி (வயது 42), வி.சந்தியாப்பிள்ளை (வயது 44),எஸ்.வசந்தராசா (வயது 30).

இவர்களில்கே. அரியதாஸ்என்பவர்அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சமூசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச்சந்தித்து தமது பிரச்சினைகள் குறித்து மாநகர ஊழியர்கள் கலந்துரையாடினர். கலந்துரை யாடலின் பின் அலுவலகத்துக்கு அவர்கள் திரும்பிக்க கொண்டிருந்தபோதே உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானது. (1-25)

# லஞ்சம் பெற்ற பெண் அதிபர் கைது

கொழும்பு, ஜூன் 11

கொழும்பில் பிரபல்யமான பெண்கள் பாடசாலையொன்றில் அதிபர் ஒருவர் நேற்று முன்தினம் லஞ்சஊழல்தடுப்பு இரகசியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

தமது பாடசாலையில் தரம் ஒன்றில் இடம் ஒதுக்கித்தருவதற்காக பெற்றார் ஒருவரிடமிருந்து 40 ஆயிரம் ரூபாய் லஞ்சம் பெற்றுக் கொள்ளும்போது இவ்வதிபர் கைது செய்யப்பட்தாகக் கூறப் படுகின்றது.

நுகேகொடையிலுள்ள இப்பாடசாலையின் அதிபர் பிள்ளைகளை தரம் ஒன்றில் சேர்ப்பதற்காக பெற்றோரிடமிருந்து பெருந் தொகை பணத்தை அறவிட்டுவந்ததாக கூறப்படுகின்றது. (ப)


எம்புறோடிங் ரை




69.00 லிருந்து

எஸ் . எஸ். யசோதரன் ஆட்ஸ்
212,கோவில் வீதி, நல்லூர்



அழகுக்கலை பயிற்சி வகுப்புகள்

பிரிவு 11 ஆரம்பமாகிறது

அழகுக் கலையில் நீங்கள் 3 மாத சான்றிதழ் பயிற்சி பெற குறிப்பிட்ட பயிற்சியாளரே பயிற்றுவிக்க இருப்பதால் பதிவுக்கு முந்துங்கள்.

பயிற்சி: சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணிக்கு.

பயிற்சிகள்

கூந்தல் அலங்காரம் (HAIR STYLE)
ஆடை அலங்காரம் (DRESSING)
முக அலங்காரம் (FACIAL)
கேக் ஐசிங் (CAKE ICEING)
தையல் பயிற்சி (TAILORING)

அழகுக் கலை பயிற்சியில் சான்றிதழ் பெற பயிற்சிக்கு முந்துங்கள்.



கலைமகள் கலையகம்,
பிரதான வீதி (வட்டியன் சந்தி),
யாழ்ப்பாணம்.

(சி/553147)



தேவை

வெதுப்பக (பேக்கரி) வேலை தெரிந்தவர்கள் உடன் நேரில் வரவும். அருகாமையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 118,
றொலக்ஸ் வெதுப்பகம்,
கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.



இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் , கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

(75132)



நீங்கள் இலங்கை வங்கியில் சேமிப்புக்கணக்கு அல்லது நடைமுறைக்கணக்கு ஒன்றைக் கொண்டுள்ளவரா?
இல்லையெனில் இன்றே கணக்கொன்றை ஆரம்பியுங்கள்!

விரையுங்கள்

கற்பகதரு மாபெரும் பரிசுச் சீட்டிழுப்பிற்கு
இன்னும் 2 மாதங்கள் மட்டுமே உள்ளன




வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன

நீங்கள் செய்யவேண்டியது. இலங்கை வங்கியில் 2008 ஆகஸ்ட் 31ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நடைமுறை அல்லது ஏதோனும் சேமிப்புக் கணக்கொன்றில் கீழ்குறித்த தொகைப் பணத்தை பேணுவதன் மூலம் மில்லியன்கள் பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள்.

| கணக்கைப் பேண வேண்டிய காலம் | முதலாவது வெற்றி வாய்ப்புக்கள் | இரண்டாவது வெற்றி வாய்ப்புக்கள் | மூன்றாவது வெற்றி வாய்ப்புக்கள் |
|---|---|---|---|
| | 1 ஆம் பரிசு 3.5 மில்லியன் பெறுமதியான மோட்டார் கார் | 1 ஆம் பரிசு 2.5 மில்லியன் பெறுமதியான மோட்டார் கார் | 1 ஆம் பரிசு 1.5 மில்லியன் பெறுமதியான மோட்டார் கார் |
| | 2 ஆம் பரிசு ஒரு மில்லியன் ரூபா பணப் பரிசு | 2 ஆம் பரிசு ரூ. 750,000/- பணப் பரிசு | 2 ஆம் பரிசு ரூ. 500,000/- பணப் பரிசு |
| | 3 ஆம் பரிசு ரூ. 750,000/- பணப் பரிசு | 3 ஆம் பரிசு ரூ. 500,000/- பணப் பரிசு | 3 ஆம் பரிசு ரூ. 250,000/- பணப் பரிசு |
| 02 மாத காலம் | ரூ. 120,000/- | ரூ. 60,000/- | ரூ. 30,000/- |
| 01 மாத காலம் | ரூ. 240,000/- | ரூ. 120,000/- | ரூ. 60,000/- |

- மேலும் 250 ஆறுதல் பரிசுகளாகிய, தங்கப்பவுண்கள் 50, அரைப்பவுண்கள் 100, மற்றும் ரூ.10,000/- பணப் பரிசுகள் 100, என்பனவும் உள்ளன.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்


# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் மணியம்



கோப்பாய் பழைய வீதியைப் பிறப்பிடமாகவும் பம்பைமடு, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் மணியம் 05.06.2008 வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகம்மாவின் சகோதரனும், அமரர் ஸ்ரீபாலகிருஸ்ணன் மற்றும் சிறிமோகநாதன், சிறிரங்கநாதன்(Elephant House), சிறிவிஜயநாதன் (உதயன் நாளிதழ்), அமரர் சிறிசிவநாதன் மற்றும் சிறிவைரவநாதன், அற்புதராணி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் மலர், யோகேஸ்வரி, சுகந்தி, மாலா, குகா, சோமு ஆகியோரின் மாமனாரும் உமேஷ், கயானி, உசா, திலக்ஷன், நிருஷன், அம்சாயினி, விதுஷன், மதுசன், யதுஷன், லதுசன், சாருஜன், வைஷ்ணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.06.2008) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
ம.சிறிவிஜயநாதன்
(மகன்)

## திருமதி கிருஷ்ணர் நேசம்

அச்சுவேலி தெற்கு, பயித்தோலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணர் நேசம் நேற்று (10.06.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அரியகுட்டி - குழந்தை தம்பதியினரின் அன்பு மகளும் இளையதம்பி - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் கிருஷ்ணரின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் யோகேந்திரன (தபால் ஊழியர் - புத்தூர்), கோமதி (கனடா), அருந்ததி (ஜேர்மனி), ரவீந்திரன் (சுவிஸ்), சுதாமதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கராணி, ஞானகரன், சாந்தினிதேவி, துரைராசா, ஜெகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.06.2008) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முழக்கன் இந்து மயானத்திற்கு பி.ப.1 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

*பயித்தோலை,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

தகவல்:
கி.யோகேந்திரன்
(மகன்)

## சோமசுந்தரம் ஆத்மலிங்கம்



வண்ணார்பண்ணை, கோபால் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் இல31, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய சோமசுந்தரம் ஆத்மலிங்கம் 09.06.2008 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் சாந்தகுமாரியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.06.2008) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் ஜேர்மனியில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*31, குளப்பிட்டி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
*தொ.பே. 0776447360*
*0777041582*

தகவல்;
சுமன் (சுமன் கேபிள்), சுரேஸ்
(பேரமக்கள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் மருந்துச் சிகிச்சை நிலையம் கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.
நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். அருகில் பிரதம விருந்தினர்களில் ஒருவரான வைத்திய கலாநிதி ஆர்.கணேசமூர்த்தியும் காணப்படுகிறார்.
யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜே.ஞானசோதி, புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி என்.ஜெயக்குமாரன் ஆகியோர் உரைநிகழ்த்துவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.
நிலையத்தை வைத்திய கலாநிதி திருமதி ஜே.கணேசமூர்த்தி திறந்து வைப்பதை நான்காவது படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## இளவாலை கன்னியர் மடம் ம.வியின் புதிய அதிபர்

யாழ்ப்பாணம்,ஜூன்11

இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக அருட்சகோதரி தயாநாயகி செபமாலை நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அதிபராக இருந்த அருட்சகோதரி இக்னேசியா சூசைப்பிள்ளை காலமானதையடுத்தே அவரின் இடத்துக்கு அருட்சகோதரி தயாநாயகி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது கடமையை கடந்த திங்கட்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

அருட்சகோதரி தயாநாயகி முன்னர் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (50)

## யாழ்.மாவட்டத்திலுள்ள 54 கஷ்டப் பாடசாலைகளுக்கு ஜப்பான் வானொலியும் பொலிஸ் பிரிவும் உதவி

### வட பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்



உடுப்பிட்டி, ஜூன்11

யாழ்.மாவட்டத்தில் கஷ்ட நிலையில் இயங்கும் 54 பாடசாலைகளுக்கு வடபிராந்திய பொலிஸ்பிரிவும்ஜப்பான்ஜே-9 வானொலியும் இணைந்து கல்வி உதவியை வழங்கவுள் ளன. இத்தகவலை 'வடபிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

அண்மையில் மேற்படி நிறுவனங்கள் இணைந்து வல்லை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் உடுதுணிகளையும் பாடசாலைக்குத் தளபாடங்களையும் வழங்கின.

பாடசாலை அதிபர் எஸ்.கண்ணதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் உரையாற்றுகையிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:


நான் பல வருடங்களின் முன்பு ஜப்பானுக்கு புலமைப்பரிசிலின் மூலம் சென்றிருந்தேன். அப்போது ஜப்பான் ஜே 9. வானொலி அனுசரணையான நண்பருடன் மேற்படி மாணவர்களின் கஷ்ட நிலைகளைப் போக்குவதற்காக எப்படி உதவலாம் எனக் கலந்தாலோசித்தோம். அதன் முடிவுதான் பாடசாலை மாணவர்களுக்கு உதவிக் கரங் கொடுக்கும் இத்திட்டமாகும். பல வருடங்களின் பின்பு இப்போதுதான் அது கைகூடியுள்ளது.

நான் வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபராக வந்ததன் பின்பு யாழ்.மாவட்ட கல்வி அதிகாரிகள், அவ்வப்பகுதிப் பிரதேச செயலர்களிடம் கஷ்டநிலையில் உள்ள பாடசாலை விவரங்களைக் கேட்டிருந்தேன். அதன் அடிப்படையில் 54 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன. அதன் முதற்கட்டமாக வல்லை றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு கற்றல் உபகரணங்களும் தளபாடங்களும் வழங்கப்படுகிறது.

இங்கு இரு பாடசாலைகள் சுனாமியால் பாதிக்கப்பட்டு (வல்வை றோ.க.த.க.பாடசாலை, வல்வை அ.மி.த.க.பாடசாலையும்) இணைந்து நடைபெற்று வருதால் இப்பாடசாலைகளுக்கு ரூபா.25,000 பெறுமதியான கற்றல் உபகரணங்களை வழங்குகிறேன். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படவிருக்கும் ஏனைய பாடசாலைகளுக்கு ரூபா 10 ஆயிரம் வீதம் பொருள்கள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களைவிட பெற்றோர் குறைவாகக் காணப்படுவது எனக்குக் கவலையளிக்கின்றது. எது எப்படியிருப்பினும் மாணவர்களுக்கான உதவிகள் வழங்கப்படும் நிகழ்வுகளில் பெற்றோர் கட்டாயம் கலந்து கொண்டு நன்கொடை வழங்குபவர்களுக்கு உற்சாகமளிக்க வேண்டும். அப்போது தான் மாணவருக்கான பலதுறை சார்ந்த தேவைகளும் பல வழிகளில் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் - என்றார்.

இவரது உரையைத் தொடர்ந்து பொலிஸ் உயரதிகாரிகள், வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வைத்திய கலாநிதி எஸ்.மயிலேறும் பெருமாள் ஆகியோரும் உரையாற்றினர். (202-155)




## கோயில் புனரமைப்பு

சுழிபுரம், ஜூன்11

தொல்புரம், மடத்துப் பிள்ளையார் கோயிலின் வசந்த மண்டபம் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

அடியார்களின் உபயத்துடன் இந்தப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றது. (202-28)

## சிதறிய மணிகளிலிருந்து முளைத்த பயிர்களில் சிறந்த விளைச்சல்!

யாழ்ப்பாணம், ஜூன்11

காலபோக நெற்செய்கையின் அறுவடையின் போது சிதறிய நெல்மணிகள் அடுத்தடுத்துப் பெய்த மழையில் முளைத்தன. இப்பயிர்களை உரிய முறையில் பராமரித்த நெற்செய்கை பயனளித்துள்ளது. இந்த நெற்பயிர்கள் இரு வாரத்தில் அறுவடை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி வடக்கு, முதலியாவெளி வயலில் இப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதே இடத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் கனகரத்தினம் என்பவரே இப் பயிர்ச் செய்கையினை பராமரித்து பயன் கண்டவராவார்.

மழையின் போது முளைத்து வளர்ந்த இப் பயிருக்கு உரிய பசளையிட்டு பின்னர் அருகில் உள்ள குளத்திலிருந்து நீர் இறைத்து பயிர்களை விளைவித்ததாக அவர் தெரிவித்தார். (202-207)

## தென்மராட்சிப் பிரதேச அரச காணிகளில் பயன்தரு மரக்கன்றுகள் நடும் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்11

தென்மராட்சி பிரதேச அரச காணிகளில் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை பிர்தேச செயலகக் காணிக் கிளையினர் ஆரம்பித்துள்ளனர்.

''நமது சூழலை நாமே பாதுகாப்போம்'' என்னும் மரம் நடுகைத்திட்டத்தினை கிறீஸ்தவ நிதியத்தின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினர் பிரதேச செயலக காணிக் கிளையினருடன் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

அரச காணிகளில் குடியிருப்போருக்கு பயன்தரு மரக்கன்றுகளும், சூழல் பாதுகாப்பு மரக்கன்றுகளும் நடப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக கடந்த வெள்ளிக் கிழமை கைதடி, நவபுரம் கிராம விஸ்தரிப்புத் திட்டத்தில் உள்ள 100 குடியிருப்பாளர்களுக்குபயன் தரும் மரங்களும், அப்பகுதியில் உள்ள கரையோரப் பகுதியில் நடுவதற்கென 2ஆயிரம் சவுக்கு மரக்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டன. (202-207)

## பருத்தித்துறையில் சட்டவிரோதமாக இயங்கிய மருந்து விற்பனை நிலையம் சிக்கியது

மந்திகை, ஜூன்11

பருத்தித்துறையில் சட்ட விரோதமாக இயங்கி வந்த மருந்து விற்பனை நிலையமொன்று யாழ். உணவு மருந்துப் பொருள்கள் பரிசோதனைக் குழுவின் திடீர்ப் பரிசோதனையின் போது அகப்பட்டுக் கொண்டது.

பருத்தித்துறை, தும்பளை வீதியில் உள்ள மருந்து விற்பனை நிலையமே உணவு மருந்துப் பொருள்கள் பரிசோதனைக் குழுவிடம் அகப்பட்டுக் கொண்டதாகும்.

நிலைய உரிமையாளர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி கே. அரியநாயகம் முன்னிலையில் அண்மையில் ஆஜர் செய்யப்பட்டார்.

மருந்து விற்பனை அனுமதிப் பத்திரம் இல்லாமல் மருந்து வகைகளை விற்பனை செய்தாரென்றும், வைத்தியச் சீட்டுக்கள் இன்றி மருந்து வகைகளைக் களஞ்சியப் படுத்தி வைத்திருந்தார் என்றும் உரிமையாளருக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதையடுத்து சட்டவிரோத மருந்து விற்பனை நிலையத்தை உடனடியாக மூடிவிட உத்தரவிட்ட நீதிபதி எதிரிக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (202-218)

## அனைத்துத் தரப்பினராலும் ஏற்கப்படும் தீர்வே நடைமுறைச் சாத்தியமானதாக அமையும்

### அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன்11

அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமையுமானால் மட்டுமே அது நடைமுறைச் சாத்தியமாகும். அது குறித்தே சிந்திக்க வேண்டும்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா இப்படிக் கூறியுள்ளார்.

யாழ்.அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை பொதுமக்கள் மத்தியில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

எமக்கான கௌரவமானதும் நிரந்திரமானதுமான இறுதித் தீர்வானது தமிழ் பேசும் மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வகையிலான தீர்வாக அமைய வேண்டும் என்பதுடன் இந்நாட்டின் ஏனைய அனைத்துத் தரப்பினராலும் அது அங்கீகரிக்கப்படக் கூடியதாகவும் இருப்பது அவசியமாகும்.

நடைமுறை சாத்தியமான கௌரவமானதும், நிரந்தரமானதுமான தீர்வினை சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்க உரிய அனைத்துத் தரப்பாரும் முன்வர வேண்டும். அவ்வாறு முன்வைக்கப்படும் தீர்வுத் திட்டம் குறித்து கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வர இயலும்.

எமது அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வினை யார் கொண்டு வருகின்றார்கள் என்பது முக்கியமல்ல. தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு அது கௌரவமானதும் நிரந்தரமானதுமான இறுதித் தீர்வாக அமைய வேண்டும் என்பதே முக்கியமாகும்.

#### சர்வகட்சி மாநாட்டின் மீதுநம்பிக்கையுண்டு

இந்நாட்டில் ஏற்கனவே செயற்பட்ட சர்வகட்சி மாநாடுகள் போலல்லாது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அமைக்கப்பட்டுள்ள சர்வகட்சி மாநாட்டின் மீது எனக்கு நம்பிக்கை இருந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் இப்பிரச்சினை தீர்க்கப்படும் என்ற எதிர்பார்ப்பும் என்னிடம் உள்ளது.

எனவே நடைமுறைச் சாத்தியமற்ற திட்டங்களை முன்வைத்து இனியும் காலங்கடத்தாது நடைமுறைச் சாத்தியமான இறுதித் தீர்வை முன்வைக்க உரிய அனைத்துத் தரப்பாரும் முன்வரவேண்டும்.

யுத்தத்தின் மூலம் எமது அரசியல் உரிமைப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் என்பதில் எனக்கு எப்போதுமே உடன்பாடில்லை. சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்குப் புலிகள் இயக்கத்திற்கு இன்னமும் கதவு திறந்தே வைக்கப்பட்டிருக்கின்றது.



தமிழ் பேசும் மக்கள் மீது உண்மையிலேயே அக்கறை இருப்பின் புலிகள் இயக்கத்தினரும் முன்வந்து தங்களது நடைமுறைச் சாத்தியமான திட்டத்தை முன்வைக்கவேண்டும். அவ்வாறின்றி வெறுமனே அறிக்கைகளை விட்டுக் கொண்டிருப்பதாலும் தாக்குதல்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாலும் அது எமது மக்களுக்கான விமோசனத்தை ஒருபோதும் கொண்டு வராது. மேலும் மேலும் அழிவு களை ஏற்படுத்துவதற்கு மட்டுமே அது வழிவகுக் கும் - என்றார்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இனங்காணப்பட்ட வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட மக்களுக்கு வீடமைப்பு மற்றும் சுயதொழில் முயற்சிகளுக்கான நிதி உதவிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா [illegible] குறிப்பிடத்தக்கதாகும். (1)

## தென்மராட்சி வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன்11

தென்மராட்சிக் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தின வலயமட்ட வாய்மொழி, எழுத்துப் போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட பாடசாலைகள் அனைத்தையும் கலந்து கொள்ளும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேககாந்தன் கேட்டுள்ளார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமது பிறந்த மண்ணின் மக்களுக்காகவே உழைக்கும் உறுதியுடன் பணிபுரிந்த உதாரண புருஷர்



## பேராசிரியர் அ.துரைராஜாவின் 14ஆவது சிராத்த தினம் இன்று

பேராசிரியர் அ.துரைராஜா மறைந்து பதினான்கு வருடங்கள் கடந்துவிட்டாலும், அவருடைய புன்சிரிப்பு நிறைந்த முகம், நிமிர்ந்த நடை, எவரையும் கவரும் கனிவான பேச்சு என்பவற்றை யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

பேராசிரியர் அ.துரைராஜா பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றத் தொடங்கியிருந்தார். பொறியியல் துறையில் பல பட்டங்களைப் பெற்று அத்துறை மாணவர்களின் மதிப்பைப் பெற்றிருந்தார். 1983ஆம் ஆண்டுக்குப் பின் கொழும்பிலிருந்த திறந்த பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக பணியாற்றிக் கொண்டிருத்தார். இக்காலத்திலேயே 1988ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தராக நியமனம் பெற்றார்.

1988இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தராக நியமனம் பெற்ற போது பல்கலைக் கழக சமூகம் மட்டுமல்லாது, யாழ்ப்பாணச் சமூகமும் எவ்வித தயக்கமும் இன்றி மிகுந்த மகிழ்ச்சியுடன் அப்பதவிக்கு அவர் பொருத்தமானவர் என்பதை ஏற்றுக்கொண்டன. பொறியியல்பீடம் ஒன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இல்லாத போதும், பொறியியல் துறையில் பிரசித்தி பெற்றிருந்த பேராசிரியர் அ.துரைராஜா துணைவேந்தராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு நியமிக்கப்பட்டமையும் அந் நியமனம் எல்லோராலும் அங்கீகரிக்கப் பட்டமையும் இன்று வரை இப்பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிய ஏனைய துணைவேந்தர்களை விட அவர் வித்தியாசமானவர் என்பதையும் எடுத்துக் காட்டியது. 1994ஆம் ஆண்டு எவரும் நினைத்திராத நேரத்தில் சடுதியாக நோய்வாய்ப்பட்டு மறையும்வரை துணைவேந்தர் பதவியை வகித்து வந்தார்.

### இக்கட்டான காலகட்டத்தில்...

பேராசிரியர் அ.துரைராஜா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னேற்றத்துக்காக கடுமையாக உழைத்தார். மிகவும் இக்கட்டான கட்டத்தில், போராட்டம் உச்சமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் அவர் தமது பதவியை வகித்து வந்தார் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். தமது சொந்த ஊரான கரவெட்டியில் இருந்து 35 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பல்கலைக்கழகத்திற்கு அதிகாலையில் எழுந்து ஈருளியில் வந்து கடமையாற்றிய பின் மாலையில் பொழுது மறைந்தவுடன் அவர் வீடு திரும்பிய நாள்கள் பலவாகும். இக்கட்டான காலகட்டத்தில் பல்கலைக் கழகத்தை எவ்வாறு இயங்கச் செய்யலாம் என்பதற்கு முன்னுதாரணமாக அவர் திகழ்ந் தார்.

பொறியியல் துறையில் பேராசிரியர் பெற்றிருந்த பட்டங்களும் அறிவும் அவருக்கு உலகத்தின் வளர்ச்சியடைந்த நாடுகளில் எப்பல்கலைக்கழகத்திலும் பதவியைப் பெற்று மிகுந்த பொருள் ஈட்டக் கூடிய வல்லமையைக் கொடுத்திருந்தது. எனினும் போராட்ட காலத்தில் கூட தாம் பிறந்த மண்ணில் வாழும் மக்களுக்காக அவர்களின் முன்னேற்றத்திற்காக சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

### உயர்ந்த பண்புகள்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விவசாய பீடம், பொறியியல் பீடம் என்பவற்றை நிறுவி விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தினை பேராசிரியர் கொண்டிருந்தார். இவற்றை கிளிநொச்சி பிரதேசத்தில் நிறுவி அப்பிரதேசத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்பதையும் மனதிற் கொண்டிருந்தார். போர் உச்சமாக நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஈருளியில் பூநகரியூடாக கிளிநொச்சிக்கு சென்று விவசாய பீடத்தினை திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. கொண்ட கொள்கையின் உறுதிப்பாடும் விடாமுயற்சி, தன்னம்பிக்கை, தனது உயிரை துச்சமாக மதிக்கும் போக்கு, மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்ற நோக்கம், தமக்கென பொருள் தேட வேண்டும் என்ற எண்ணமின்மை என்பவை அவரிடமிருந்த உயர்ந்த பண்புகளாகும். இப்பண்புகள் பல்கலைக்கழகத்தில் அதியுயர் பட்டங்களைப் பெற்று கடமை யாற்றிக் கொண்டிருந்தபேராசிரியர்கள்பலரிட மிருந்து அவரை வேறு படுத்தி உயர்ந்த மனித ராக அடை யாளம் காட்டின.

பல்கலைக் கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் மத்தியிலும் அவர் மிகுந்த மதிப்பைப் பெற்றிருந்தார்.சிறியன சிந்தியாத மனிதராக அவர் வாழ்ந்ததனால் இன்றும் பலருடைய மனதில் உயர்ந்த மனிதராக இடம் பிடித்துள்ளார்.

**ந.பேரின்பநாதன்**
*தலைவர், பொருளியல்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*


## விற்பனைக்கு

LML SELECT II தொடர் இல. 145 - 9 XXX கொண்ட ஸ்கூட்டர் உடன் விற்பனைக்கு

தொடர்பு : N.சிறிகாந்தன்
*167, இராமலிங்கம் வீதி,*
*முடமாவடி, நல்லூர்.* (75246)

## உடன் விற்பனைக்கு

80% முட்டையிடுகின்ற கோழிகள் 150 உடன் விற்பனைக்கு.

தொடர்பு N.சிறிகாந்தன்
*167, இராமலிங்கம் வீதி,*
*முடமாவடி, நல்லூர்.*
(75254)


## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன்11

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் யாழ்.வலய பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதலாம் இடத்துக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென்.சாள்ஸ் மகாவித்தியாலய அணியும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சென். ஜேம்ஸ் மகா வித்தியால அணியை எதிர்த்து சென். ஜோசப் வித்தியாலயமும் மோதவுள் என.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் வி.எஸ். மகேந்திரனும்சிறப்பு விருந்தினராக விளையாட்டு உத்தியோகத்தர் சி.நித்தியநாயகமும்கலந்து கொள்வார்கள்.

(50)


# COMPUTER EXPRESS
## INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

# 15, Sirambiyadi lane, Jaffna. *Branch:* #167, Kasthuriyar Rd, Jaffna.
PHONE 021 222 8250, 0777222422

80% Off

### மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008

| Course | Duration | Old price | Price |
|---|---|---|---|
| Diploma in Computer Science | 4 Months | ~~10,750~~ | 2,150 |
| Honours Diploma in Computer Science | 5 Months | ~~13,000~~ | 2,600 |
| Diploma in Web page Designing | 4 Months | ~~10,750~~ | 2,150 |
| Diploma in Graphic Designing | 4 Months | ~~10,750~~ | 2,150 |
| Diploma in Desktop Publishing | 4 Months | ~~10,000~~ | 2,000 |
| Diploma in Hardware Engineering | 3 Months | ~~10,000~~ | 2,000 |
| Diploma in Auto CAD | 3 Months | ~~10,000~~ | 2,000 |
| Diploma in Microsoft office | 3 Months | | 1,500 |
| Accounting Package | 3 Months | ~~10,750~~ | 2,150 |

50% OFF **ADVANCE COURSES**

| Course | Old price | Price |
|---|---|---|
| Diploma In Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma In Video Editing | ~~6500~~ | 3250 |

கம்யூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத செய்முறைப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :

Batch I :13/06/2008 9 AM
Batch II :14/06/2008 9 AM
Batch III :15/06/2008 9 AM
Batch IV :18/06/2008 9 AM


## சமய சந்நிதிகளில்

வடமராட்சி
ஜூன் 11

புலோலி, மந்திகை வில்லிப்பாதி முருகன் ஆலய மணவாளக் கோல விழாவும் அஷ்டோத்தர சங்காபிஷேகமும்நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

(203-236)

• • •

வலி.வடக்கு
ஜூன் 11

தெல்லிப்பழை கிழக்கு தோட்டத்து ஞான வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதனைத்தொடர்ந்து பி.ப. 5 மணிக்கு [illegible] இடம்பெறவுள்ளன.

## மரண அறிவித்தல்கள்

### சீனிவாசகம் இராசரத்தினம்

**(கல்வித் திணைக்கள லிகிதர் - பின்பு குடியகல்வு, குடிவரவு திணைக்கள ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட சீனிவாசகம் இராசரத்தினம் 09.06.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சீனிவாசகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கமலத்தின் அன்புக் கணவரும் சிறிஸ்கந்தராசா (லண்டன்), சிறிகதிர்காமர் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, முருகையா, கிச்சி, கனகரத்தினம் மற்றும் கணேஸ், பாலச்சந்திரன், சிவனேசன், ஆச்சி ஆகியோரின் பாசமிகு சகோதர னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (75252)

தகவல்:
**க.கருணைநாயகம்.**

### கந்தசாமி வேதாரணியம்



புங்குடுதீவு, இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமான கந்தசாமி வேதாரணியம் (08.06.2008) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-இராசமணி தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், பிரியங்கா, ராணியா, ராம்ஜி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாமூர்த்தி (ஜேர்மனி), இராசபூபதி (கொழும்பு), கனகநாயகம் (உமா வண்ணச்சோலை, யாழ்.) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுந்தரலிங்கம் (கொழும்பு), ஸ்ரீவதனி (ஜேர்மனி), சுபோதினி ஆகியோரின் மைத்துனரும் ரேணுகா, கார்த்திகா, சுரேகா, மிலானி, அனுரேகா, அட்சரபானு, அனுசன் ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும், மனோதினி, பகீரதன், கவிதரன்(கனடா), சாந்தினி, புவிதரன், பிரபாலினி ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2008) புதன்கிழமை கனடா, மொன்றியலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*356, கோயில் வீதி,*
*நல்லூர்.* (75253)

தகவல்:
**கனகநாயகம்** (சகோதரன், உ[illegible] வண்ணச்சோலை, யாழ்.), **சுபோதினி**

## மரண அறிவித்தல்

### திருமதி சிவஞானம் சிவபாக்கியம் (அம்மா)



திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் சிவபாக்கியம் (அம்மா) (08.06.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவஞானத்தின் அன்பு மனைவியும் மகேஸ்வரன் (முன்னாள் தொழில் நுட்பவியலாளர், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்), தனேஸ்வரி, கமலேஸ்வரி, மோகனேஸ்வரி (யாழ்.தினக்குரல்-நிர்வாகப் பிரிவு), காலஞ்சென்ற கோமேஸ்வரி மற்றும் கயல்விழி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் (பழனி), பொன்னுத்துரை (சின்னராசா), கந்தையா, துரைராஜா, சிவலிங்கம், பரமேஸ்வரன் மற்றும் கந்தசாமி (முன்னாள் விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான புஸ்பம், மகேஸ்வரி, மாணிக்கம், சற்குணம், கனகம்மா மற்றும் தங்கபூமணி, இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் லோகநாதன், ஞானாம்பிகை (ஆசிரியை - விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்), தங்கராஜா ஆகியோரின் மாமியும் தரணீதரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் கட்டடத் திணைக்களம், மன்னார்), மிதுலன், கௌரிதன், கார்த்திகா, நிருத்திகா, துவாரகன், கீர்த்தனா, தனுசியன், துளசிதன், நிலானி, உபேந்திரா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.06.2008) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அம்மன் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**குடும்பத்தினர்,**
**சி.கந்தசாமி (சகோதரன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே இடம்பெற்ற விலகல் முறையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்களில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதும் காட்சிகளையும்- இரு அணிகளும் தெல்லிப்பழை பிரதேச செயலர் சு.முரளிதரன், மாவட்ட விளையாட்டு அலுவலர் துரைசிங்கம் மற்றும் விளையாட்டு அலுவலர்கள், மத்தியஸ்தர்களுடன் இணைந்து காணப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# பிரதேச செயலக எல்லேப் போட்டி; கேடயத்தைச் சுவீகரித்தது கோப்பாய்

வலி.வடக்கு,ஜூன் 11

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான எல்லேப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலகமும், கரவெட்டி பிரதேச செயலகமும் மோதிக் கொண்டன.

முதலில் கோப்பாய் பிரதேச செயலகம் ஓட்டங்களைப் பெற களத்தில் இறங்கியது. விளையாடத் தொடங்கிய கோப்பாய் பிரதேச செயலக வீரர்கள் மிகவும் திறமையாக விளையாடி முதல் இனிங்சில் யாரும் எதிர் பாராவண்ணம் 12 ஓட்டங்களை குவித்தார்கள். இதனைத் தொடர்ந்து அனைவரும் ஆட்டமிழந்தார்கள்.

13 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் விளையாடத் தொடங்கிய கரவெட்டிப் பிரதேச செயலக அணியின் அனைவரும் முதல் இனிங்சில் ஆட்டமிழந்து 02 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர்.

இரண்டாவது இனிங்சை கோப்பாய் பிரதேச செயலக அணி விளையாடாது தொடர்ந்து கோப்பாய் பிரதேச செயலக அணியை விளையாடும்படி வேண்டிக் கொண்டது.

தொடர்ந்து இரண்டாவது இனிங்சை விளையாடிய கரவெட்டி பிரதேச செயலகம் இரண்டாவது இனிங்சில் அனைவரும் ஆட்டம் இழந்து ஓர் ஓட்டத்தை மட்டும் பெற்றுக்கொண்டனர்.

ஆட்டநிறைவில் கோப்பாய் பிரதேச செயலகம் 12:03 ஓட்டங்கள் என்ற அடிப்படையில் கரவெட்டிப் பிரதேச செயலகத்தை வெற்றி பெற்று யாழ். மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக யாழ்.மாவட்ட சம்பியனாக வந்த பருத்தித்துறை பிரதேச செயலகம் இம்முறை அரையிறுதியுடன் வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

# பாடசாலைகள் எல்லே போட்டியில் வலிகாமத்தில் அருணோதயா சம்பியன்

வலி.வடக்கு, ஜூன்11

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே முதல் தடவையாக 17 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கு நடத்தப்பட்ட எல்லே போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வலிகாமம் கல்வி வலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையும், அருணோதயாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் ஓட்டங்ளைப் பெற விளையாடிய அருணோதயாக் கல்லூரி ஆறு ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இப்போட்டி 50 பந்துகளுக்கு மட்டும் என மட்டுப்படுத்தியளவில் ஆடப்பட்டது.

ஏழு ஓட்டங்களை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில் ஓட்டங்களைப் பெற விளையாடிய மானிப்பாய் மொமோறியல் ஆங்கிலப் பாடசாலை தமக்குரிய 50 பந்துகளை வீசி நிறைவுபெற்ற போதிலும் ஓட்டங்கள் எதனையும் பெற முடியவில்லை.

ஆட்ட நிறைவில் அளவெட்டி அருணோதயாக கல்லூரி 6:0 என்ற ஓட்டங்களினால் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையை வெற்றி பெற்று வலிகாமம் கல்வி வலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க மகா் வித்தியாலயமும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

50 பந்துக்களைக் கொண்ட இப்போட்டியில் இரு அணிகளும் விளையாடி ஆட்ட நிறைவில் தலா 3 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. போட்டியின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக இரு அணிகளுக்கும் மேலும் பத்துப் பந்துகள் வீசப்பட்டன.

இந்தப் பந்துகள் வீசப்பட்டபோது குளமங்கால் றோமன் கத்தேலிக்க வித்தியாலயம் 2 ஓட்டங்களை மேலும் பெற்றுக் கொண்ட போதிலும் இராமநாதன் கல்லூரி எந்தவொரு ஓட்டங்களையும் மேலதிகமாக வழங்கப்பட்ட பந்துவீச்சின்போது பெறவில்லை.

இந்நிலையில் குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் 05:03 ஓட்டங்கள் என்ற அடிப்படையில் இராமநாதன் கல்லூரியை வெற்றி பெற்று 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (1-86)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணத்தை கொக்குவில் ஸி.ஸி.ஸி. தனதாக்கியது

வலி.வடக்கு,ஜூன் 11

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திய விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 40 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய இறுதி ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

பூவா, தலையா போட்டதில் வெற்றி பெற்ற கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக்கழக அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய பற்றீசியன்ஸ் அணியினர் 30.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

யக்சன் 21, சுஜீபன் ஆட்டமிழக்காது-19, ஜெயந்திரன் 17, ஜனன்ராஜ் 15 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். உமாநாத் 08 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் வல்லவக்குமரன் 05 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் நதீஸ்வரன் 08 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 20 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் றொபேசன், ஐங்கரன் 20, 22 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் மற்றும் பிரதாபன் 4 பந்துகளை வீசி ஓர் ஓட்டத்திற்கு ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினார்கள்.

142 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 23 ஓவர்கள் நிறைவில் 03 விக்கெட்டுகளை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

சசிகரன் ஆட்டமிழக்காது எட்டு நான்கு ஓட்டங்களும் இரண்டு ஆறு ஓட்டங்களும் அடங்கலாக 61 ஓட்டங்களையும் ஐங்கரன் ஆட்டமிழக்காது 23, பிரதீபன் 18, வல்லவக்குமரன் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

லவதீசன் 06 ஓவர்கள் பந்துவீசி 37 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் நிலோஜன் 04 ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினார்கள்.

பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட ஈ.எஸ்.பி.நாகரத்தினம் தம்பதியினர் வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவித்தார்கள்.

கொக்குவில் சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணியைச் சேர்ந்த ஐங்கரன் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், சிறந்த பந்துவீச்சாளராக பிரதாபனும் ஆட்ட நாயகனாக சசிகரனும் தெரிவு செய்யப்பட்டதுடன் பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சேச்சில் சிறந்த களத்துடுப்பாளராகவும் தெரிவுசெய்யப்பட்டார். (1-86)




ஆட்டங்களின் சில காட்சிகள்

ஈ.எஸ்.பி. நிறுவனத்தின் உரிமையாளரின் ...வியார் திருமதி தங்கமலர் ... வெற்றிக்கேடயம் வழங்கும்போது...

# தெல்லிப்பழை பிரதேச மட்ட இளைஞர் கழகப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஜூன் 11

இலங்கை தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கழகங்களுக்கு இடையே நடத்திய பெரு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய கழகங்களின் விவரம் வெளியாகியுள்ளது.

துடுப்பாட்டம்

*ஆண்கள்* - மல்லாகம் சன்மார்க்க இளைஞர் விளையாட்டுக் கழகம், அளவெட்டி இளைஞர் விளையாட்டுக் கழகம்.

*பெண்கள்* - அளவெட்டி பாரதிதாசன் இளைஞர் விளையாட்டுக் கழகம், இளவாலை இளஞ்சுடர் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

வலைபந்தாட்டம்

அளவெட்டி விநாயகர் இளைஞர் விளையாட்டுக் கழகம், அளவெட்டி பாரதிதாசன் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

உதைபந்தாட்டம்

அளவெட்டி விநாயகர் இளைஞர் விளையாட்டுக் கழகம், இளவாலை வெண்புறா விளையாட்டுக் கழகம்.

எல்லே

*ஆண்கள்* - மல்லாகம் சன்மார்க்க இளைஞர் விளையாட்டுக் கழகம், அளவெட்டி இளைஞர் விளையாட்டுக் கழகம்.

*பெண்கள்* - மல்லாகம் சன்மார்க்க இளைஞர் விளையாட்டுக் கழகம், அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக் கழகம்.

கபடி

*ஆண்கள்* - இளவாலை வெண்புறா இளைஞர் விளையாட்டுக் கழகம், அளவெட்டி விநாயகர் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

*பெண்கள்* - இளவாலை இளஞ்சுடர் இளைஞர் விளையாட்டுக் கழகம், மல்லாகம் சன்மார்க்க இளைஞர் விளையாட்டுக் கழகம். (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



## திருமதி
# விஸ்வலிங்கம் சசிகலா (மீனா)

**தோற்றம்**
**11.02.1966**

**மறைவு**
**28.04.2008**

வெள்ளையுள்ளம் படைத்த எமது
அன்புச் சசியே!
கொள்ளையடித்துச் சென்றானோ காலன்
உனது இன்னுயிரை?
நீ செய்த காரியத்தால் உன் உடலைத்தான்
எரிக்க முடிந்தது!
எமது உள்ளத்தில் நீறுபூத்த
நெருப்பாக இருக்கும் உனது
நினைவை எரிக்கமுடியுமா?
நாங்கள் உனை மறக்கமுடியுமா?
சிரித்த முகத்துடன் வரும் உனதுருவம்
எம் உள்ளத்தில் மறையாதம்மா!
கணீரென்ற உனது இனிய குரல்
காதுகளில் கேட்கிறதே!
நீ ஏனம்மா எமைப் பிரிந்தாய்?
அழகிய முகம் கருகியதேனோ?
அன்னமிட்ட கை தீ மூட்டியதோ?
ஒருமுறை எம்முன் ஓடிவந்து உன்
திருமுகம் காட்டாயோ சசியே!
உன் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை
வேண்டுகிறோம்.

28.04.2008 திங்கட்கிழமை
சிவபதம் அடைந்த
அமரர் விஸ்வலிங்கம் சசிகலா (மீனா)
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 07.06.2008
சனிக்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில்
நடைபெற்றன. வீட்டுக்கிருத்திக் கிரியைகள்
இன்று (11.06.2008) புதன்கிழமை எமது
இல்லத்தில் நடைபெறவிருப்பதால்
அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம்
வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்
கிரியைகளிலும் மதியபோசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
[illegible] சாவகச்சேரி.

குடும்பத்தினர்
(கணவர் - ஏ.லிங்கம்).

(75240)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிக்குள் புதைந்துள்ள கணக்கற்ற புதையல்

அண்ட வெளியில் பல விதமான விண்கற்களும், கோள்களும் மிதந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் பல, கற்களால் ஆனவை என்று அறிவியல் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அதே போல சூரிய குடும்பத்தைச் சேர்ந்த 9 கிரகங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி சிறப்புக்கள் இருக்கின்றன. சூரிய குடும்பத்தில் இருக்கும் கிரகங்களில் உயிரினங்கள் வாழும் கோளானது நம் பூமி மட்டுமே. மற்ற கோள்களை விட பூமி சற்று வித்தியாசமான கோளாகும்.

நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு என்ற பஞ்ச பூதங்களைக் கொண்ட இந்தப் பூமியில் பல விதமான அதிசயங்களும் புதைந்து கிடக்கின்றன. இயற்கை பல பில்லியன் ஆண்டுகளாகச் சிக்கலான இந்தப் பிரபஞ்சத்தைப் படைக்க கடினமான வேலை புரிந்துள்ளது. பூகோளம் பிறந்து தவழ்ந்து வரும்போது, எளிய இரசாயனக் கலவைகளையும் உண்டாக்கி இருக்கிறது. பிற்காலத்தில் பூதள அடித்தட்டுக்கள் (earth's crusts) குளிர்ந்து கடினமானதும்,

எரிமலைப் புகை வாயுக்களும், நீராவியும் வெளியேறி மழை பொழிந்து ஏரிகளும், கடல்களும் உண்டாகின. பூகோளத்தின் கனற் குழம்பு கொதிக்கும் உட்கருவைக் காய்ந்து போன போர்வையாய் மூடியிருக்கும் பூதள அடித்தட்டுக்கள் மானிடரை மயக்கும் பல்வேறு வியத்தகும் ஒளிக் கற்களை உண்டாகும் புதையல் களஞ்சியமாகவும் இருந்து வருகின்றன.

அடித்தட்டின் மேலே மண்ணும், கற்களும், மேவி மரங்களும், செடி கொடிகளும் படர்ந்து வனாந்தரக் காடுகள் வளரும்போது, அடித்தட்டுக்குக் கீழே வெகு ஆழத்தில் ஒளிக்கற்கள், உலோகத் தாதுக்கள், நிலக்கரி, கச்சா எண்ணெய் போன்றவை ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. நவீன தொழில் துறை இயந்திர நாகரீகம் தற்போது மேற்கூறிய பூதளப் பண்டங்களைப் பயன் படுத்தியே முன்னேறி வருகிறது. ஒரு கால த்தில் நிரம்பி வழிந்த நிலக்கரி போன்ற எரி சக்தி கச்சா எருக்கள் கொஞ்சம் கொஞ்சமாய் வற்றிய வண்ணம் குறைந்து வருகின்றன.

பூமியின் மூலை முடுக்கு, குழிகளில் புதைந்து கிடக்கும் விந்தையான கற்கள், அதிசயப் பாறைகள், கண்ணைக் கவரும் பளிங்குப் படிவங்கள், ஒளிபெற்ற உலோகங்கள் யாவும் ஒளிவீசும் விலை மிகுந்த கற்களாகும். கற்பாறைகள் பூமிக்கு மேலும், தரைக்கு கீழும் இருப்பவை. பூகோள உட்கருவில் திரவமாக உலவும் பாறைக் குழம்பு (magma) திணிவு (density) குன்றியதால் மிதக்கிறது. மேலே ஏறும் பாறைக் குழம்பு மெதுவாக வெப்பம் தணிந்து, குளிர்ந்து திடப்பாறை ஆகிறது. அவ்விதம் கனற் குழம்பு கடினப் பாறையாக மாற்றமடைய பல்லாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. சில சமயங்களில் உட்கருவின் அழுத்தம் மிகையாகி, பாறை இடுக்கைப் பிளந்துகொண்டு, கனற் குழம்பு பீறிட்டு வெளியேறலாம். அவ்வாறு பீறிட்டுக் கிளம்பும் கனற்குழம்பு, எரிமலைக் குழம்பாக வெப்பமுடனும், புகை மூட்டமுடனும் வெளியேறிப் பூமியின் சூழ்வெளியை நாசம் செய்கிறது.



கண்கவரும் கற்கள், படிகங்கள், பளிங்குகள் (crystals, gems, precious, stones) யாவும் பூதள உட்கருவின் கனற்குழம்பு, வெப்பம் தணிந்து கடின பாறைகளாய்த் திடப்படும் போது உருவாகின்றன.

அக்கற்கள் பாதிக்கப்பட்ட நுண்ணிய சில்கள் கொண்ட பஸால்ட் பாறை 'புரோஃபிரி' (prophry) என்று அழைக்கப்படுகிறது. கண்கவரும் அவ்வழகிய பாறைகள் பண்டைக்கால எகிப்தியர் தமது கட்டடக் கலைக்குப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்று அறியப்படுகிறது. விலை மிக்க ஒளிக்கற்கள் இல்லாத நாடு உலகில் இல்லை என்றே கூறலாம். அபூர்வக் கற்களுக்கு பட்டை தீட்டி ஒளியூட்டும் சக்தி அளித்து, நகை ஆபரணங்கள் படைக்கும் தொழிற்கூடங்கள், உலகில் தற்போது பெருகிய வண்ணமாய் இருக்கின்றன. சில நாடுகளில் சில வித சிறப்புக் கற்கள் ஏராளமாய் கிடைக்கும்.

உலகில் பேரளவு வைரங்களைத் தோண்டி எடுத்து விற்று வரும் நாடு தென்னாபிரிக்கா. அதே சமயத்தில் கனடா, இந்தியா, பிரேசில், சைபீரியா, டான்ஸானியா போன்ற நாடுகளிலும் வைரங்கள் தோண்டி எடுக்கப்படுகின்றன. வைரத்தைப் போன்ற மதிப்புமிக்க எமரால்டு (emerald) தென்னமெரிக்காவில் பெரு, கொலம்பியா ஆகிய நாடுகளிலும் ரஷ்யா, தென்னாப்பிரிக்கா சுரங்கங்களிலும் கிடைக்கின்றன. அதுபோல ரூபி (ruby) மியன்மார், ஸ்ரீலங்கா, சாஃபையர் (sapphire), ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் அதிகம் கிடைக் கின்றன. இவ் வகையான வைரங்களும், ஒளிரும் கற்களும் சில சமயங்களில் மனிதருக்கு நல்ல பலன்களைத் தருகின்றன என்பது நமது நம்பிக்கை யாகவும் இருந்து வருகிறது.

★★★★★★★★★★★

## பொறாமையில்லாத விஞ்ஞானி



ஜீன் பால் மாரட் என்ற இளம் ஆராய்ச்சியாளரின் பொறாமை லவோய்சியரைப் பலி கொண்டது. ஆனால், நிறை குடம் போன்ற இன்னொரு விஞ்ஞானி தம்மால் முடியாத ஒரு சாதனையைச் செய்து முடித்த தம்மை விட இளையவரான விஞ்ஞானி ஒருவரை வீடு தேடிச் சென்று பாராட்டிய பெருந்தன்மைக்கும் வரலாற்றில் சான்றுகள் உள்ளன.

லூயிஸ் பாஸ்டர் என்ற விஞ்ஞானி டார்டாரிக் அமிலம் பற்றிய பல உண்மைகளைக் கண்டறிந்து வெளியிட்டார். உலகப் புகழ் பெற்ற மற்றொரு பிரெஞ்சு நாட்டு விஞ்ஞானியான பையட் என்பவர் அதே டார்டாரிக் அமிலத்தைப் பற்றி அதற்கு முன்னர் பல ஆண்டு காலமாக ஆராய்ந்தும் வெற்றி பெறாமல் இருந்தார்.

லூயிஸ் பாஸ்டரின் வெற்றியும், அவர் கண்டு பிடித்த உண்மைகளும் அவரை வியப்பில் ஆழ்த்தின. நிறை குடமான அவர் தம்மால் முடியாததை இன்னோர் இளைஞர் செய்து விட்டாரே என்று பொறாமை கொள்ளவில்லை. மாறாக மகிழ்ச்சியே அடைந்தார். லூயிஸ் பாஸ்டரைத் தாமே வலியச்சென்று நேரில் சந்தித்து, கட்டித்தழுவி தன் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தார்.

"என்னால் கண்டுபிடிக்க முடியாதிருந்த அறிவியல் உண்மைகளை நீங்கள் கண்டுபிடித்திருப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. உங்களுடைய இந்த வெற்றி விஞ்ஞான உலகுக்கும், மனித குலத்திற்கும் கிடைத்த பெரிய வெற்றியாகும்!" என்று பாராட்டினார், முது பெரும் விஞ்ஞானி பையட்.

அதைக் கேட்டு இளம் விஞ்ஞானியான லூயிஸ் பாஸ்டர் உள்ளம் உருகிப் போனார். "தங்களைப் போன்ற பேரறிஞர்கள் காட்டிய பாதையில்தான் இளைஞர்கள் ஆகிய நாங்கள் செல்கிறோம். எப்பொழுதும் உங்கள் வழிகாட்டுதலும், வாழ்த்துக்களும் எங்களுக்குத் தேவை!" என்றார் மிக அடக்கமாக.

### ஓய்வை வெறுத்தவர்

அதே லூயிஸ் பாஸ்டர் தான் வெறி நாய்க் கடியைக் குணமாக்க மருந்து கண்டுபிடித்தார். மேலும் பல அரிய ஆய்வுகளையும் செய்து பெயரும் புகழும் பெற்றார். என்றாலும் தாம் கண்டறிந்த உண்மைகளை உலக மக்களுக்கெல்லாம் பொதுவாக்கிவிட்டு, தாம் மட்டும் வறுமையில் வாடினார்.

அதைக் கண்ட பிரெஞ்சு அரசாங்கம் அவருக்கு 12 ஆயிரம் பிராங்குகளை உதவிப் பணமாக வழங்கியது. அதைக் கேள்விப்பட்டு நோய்ப் படுக்கையிலிருந்த லூயிஸ் பாஸ்டரைப் பாராட்ட அவருடைய நண்பர்கள் பலரும் அவர் வீட்டுக்குச் சென்றனர்.

அரசாங்க உதவிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு எங்காவது மலைப்பாங்கான இடத்துக்குச் சென்று சிறிது காலம் ஓய்வெடுத்து விட்டு வருமாறு அந்த நண்பர்கள் ஆலோசனை கூறினர்.


அதை ஏற்க மறுத்த லூயிஸ் பாஸ்டர் சொன்ன மறுமொழி வருமாறு:

வழக்கமாகச் செய்யும் ஆராய்வுப் பணிகளை நிறுத்திவிட்டு ஓய்வு பெறுவதென்பது எனக்கு மகிழ்வையோ, தெம்பையோ தராது. மாறாக அதுதான் எனக்குப் பெரிய நரக வேதனையாக இருக்கும். "உழைக்கும்போது பெறும் இன்பமும், மகிழ்ச்சியும் ஓய்வு பெறும்போது எனக்கு ஒரு நாளும் கிடைக்காது" என்றாராம் லூயிஸ் பாஸ்டர்.

மரணப் படுக்கையிலிருந்த இறுதிக் காலத்தில் கூட உழைக்காமல் சோம்பிப் படுத்திருப்பதைச் சற்றும் விரும்பவில்லை அந்த உத்தம விஞ்ஞானி.

## மகாராணியின் லண்டனிலுள்ள பக்கிங்ஹாம் அரண்மனை

ராம்



லண்டனில் அமைந்துள்ள பிரிட்டிஸ் மகாராணியின் பக்கிங்ஹாம் மாளிகையானது உலகில் மிகப்பழமையான மாளிகைகளில் ஒன்றும் மிக அழகானதுமான அரச மாளிகையாகும். லண்டனில் சென்ஜேம்ஸ் தேவாலயத்துக்கும் கிறீன்பார்க் எனப்படும் பூங்காவுக்கும் இடையிலான ஒரு ரம்யமான இடத்தில் இம்மாளிகை அமைந்துள்ளது. அழகாகவும் கவனமாகவும் பராமரிக்கப்படும் பல பூங்காக்களை கொண்டதாகவும் இம் மாளிகை திகழ்கின்றது.

பக்கிங்ஹாம் மாளிகை இப்பொழுது அமைந்துள்ள இடத்தில் முதன் முதல் நிர்மாணிக்கப்பட்ட கட்டடமானது கோரிங் ஹவுஸ் என்று அழைக்கப் பட்டது. பின்னர் ஆர்லிங்டன் பிரபுவின் லண்டன் வாசஸ்தலமாக அது மாறியதன் பின்னர் ஆர்லிங்டன் இல்லம் என்று அழைக்கப்பட்டு வந்தது. 2வது சாள்ஸ் அரசர் காலத்தில் ஆர்லிங்டன் பிரபு ஒரு பிரபலமான அரசியல் தலைவராக திகழ்ந்தார்.

1703 ஆம் ஆண்டு இந்தக் கட்டடம் இடித்துத் தள்ளப்பட்டு அவ்விடத்தில் பக்கிங்ஹாம் - மற்றும் நோர்மன்பி பிரபுவினால் கட்டடம் ஒன்று கட்டப்பட்டது. அந்த வகையில் தான் அக்கட்டடத்திற்கு அப்பெயர் வரலாயிற்று. மூன்றாம் ஜோர்ஜ் மன்னர் தமது திருமணத்தையடுத்து பக்கிங்ஹாம் மாளிகையை விலைக்கு வாங்கினார். அன்றிலிருந்து அது அரச மாளிகையாக இருந்து வருகின்றது. அரசர்கள் மாறும் போதெல்லாம் மாளிகை புதுப்பிக்கப்பட்டும் மேம்படுத்தப் பட்டும் வந்துள்ளது. மாளிகையின் இப்போதைய முன்தோற்றம் 1913 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டது.

பக்கிங்ஹாம் அரண்மனையானது நிறைய கலைப்பொருள்களையும் புராதன சின்னங்களையும் பொக்கிஷங்களாகக் கொண்டுள்ளது. பக்கிங்ஹாம் மாளிகையின் மகாராணிக்குரிய காட்சி பிரிவில் மகாராணியால் தெரிவுசெய்யப்பட்ட அவருக்குப் பிரியமான கலைப்பொருள்கள் காட்சிக்கு உள்ளன.

கோடை காலத்தில் மாளிகையின் காவலர்கள் கடமை மாறிச் செல்லும் காட்சியைப் பார்ப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் மகாராணியாரை ஒருமுறை பார்த்து விடுவதற்காகவும் மாளிகையின் முன்பக்க முள்ள நடைபாதையில் மக்கள் உள்ளூரிலிந்தும் வெளியூரிலிருந்தும் வந்து கூடிவிடுவார்கள் மகாராணியார் தமது பல்வேறு கடமைகளில் ஒன்றுக்காக புறப்பட்டு செல்வதை மக்கள் அப்பொழுது பார்க் கக்கூடியதாய் இருக்கும். மகாராணி மாளிகையில் தங்கியிருக்கும் காலத்தில் அவருடைய கொடியானது எப்பொழுதுமே மாளிகையின் மேல் உள்ள கம்பத்தில் பறந்து கொண்டிருக்கும்.

**தன்னம்பிக்கை**

மனம் உடைந்து போனதா?
எழுந்து வா!.... அதோ,
ஒடித்தும் வளர்ந்த முருங்கை
நிமிர்ந்து நிற்பதைப் பார்!

## டைனோசர்கள் அழிந்துபோன காரணம் என்ன?



சுமார் 180 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஊர்வனவாகிய (Rleptiles) பிராணிகளே பூமியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. அவ்வாறான உயிரினங்கள் ஏராளமாக வாழ்ந்து வந்தன. அவைகள் மிகவும் சக்தி வாய்ந்தவையாகவுமிருந்துள்ளன. எனவேதான் அந்தக் காலப்பகுதியை (Mesozoic Era) ஊர்ந்து செல்லும் உயிரினங்களின் ஊழி என்று விஞ்ஞானப் பூர்வமாக அழைக்கப்பட்டது. இவ்வாறு ஊர்வனவற்றின் மிகப் பெரிய உருப்படியாகக் காண[illegible] என்று [illegible] பூமியின் மீது நடமாடிய பெரிய விலங்குகளில் மிகப் பெரியது இந்த டைனோசரே என்று கூறப்படுகின்றது. ஆனால் சுமார் 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் காலநிலை மாற்றங்களுடன் தாக்கு பிடிக்க முடியாமல் இந்த மிருகம் பூமியிலிருந்து முற்றாக அழிந்து போயிற்று.

முதலில் தோன்றிய டைனோசர்கள் ஒரு வான்கோழியை விட பெரிதாக இருக்கவில்லை. அவைதம் பின்னங் கால்களால் நடந்தன. ஆனால் காலப்போக்கில் அவைகளில் சிலவற்றின் உடல்கள் பருக்கவும் நீளமாகவும் தொடங்கின. இறுதியில் உடல் பருமனை தம் கால்களால் சுமக்க முடியாத நிலைக்குள்ளாகின. உடல் பாரத்தை நீரில் மிதப்பதின் மூலம் சமாளிக்க வேண்டிய நிலைக்குள்ளாகின.

இவ்வாறான ராட்சத டைனோசர் ஒன்று புரொன்டோசாரஸ் (Brontosaurus) என்று அழைக்கப் படலாயிற்று. இந்த வித டைனோசர் 20 அல்லது 25 மீற்றர் நீளமும் சுமார் 38 தொன் நிறையும் கொண்டதாய் இருந்துள்ளது. ஏனைய டைனோசர்கள் நிலத்தில் வாழ்வனவாக இருந்தன. இதில் (Tyrannosaurus) ரைறானோசாரஸ் என்பது மிகவும் குரூரத்தன்மை கொண்டதாக விருந்துள்ளது. இது சுமார் 14 மீற்றர் நீளமும் 6 மீற்றர் உயரமும் கொண்டதாய் இருந்துள்ளது.

டைனோசர்கள் பல்வேறு விதங்களில் பல்கிப் பெருகியிருந்தாலும் அவைகளில் எதுவும் நல்ல முறையில் மூளை வளர்ச்சி பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. இயற்கை அனர்த்தங்களை எதிர்த்து வாழும் அளவுக்கு மூளை வளர்ச்சி அடையாதிருந்தமையும் டைனோசர்கள் அழிந்தொழிந்து போனமைக்கான காரணங்களில் ஒன்றாகும்.

பூமியின் மீதும் காலநிலைகளிலும் ஏற்பட்ட மாற்றங்களே டைனோசர்கள் அழிந்து போனமைக்குக் காரணம் என்று பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள்.

நீர் நிலைகள் வற்றி காய்ந்து போயின. மலைகள் தோன்றலாயின. சில டைனோசர்களால் காய்ந்த நிலப்பரப்புக்களில் வாழமுடியவில்லை. காலநிலை மாற்றத்தினால் தாவரங்களிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. தாவர உண்ணிகளாகவிருந்த டைனோசர்களுக்கு உணவுத்தட்டுப்பாடும் ஏற்பட்டது. அத்துடன் பூமியில் பருவ காலங்கள் தோன்ற ஆரம்பித்தது.

கோடைகள், குளிர் காலங்களாகவும், மழை காலமாகவும் பின்னர் கோடைகளாகவும் பருவங்கள் மாறியபோது அதற்கேற்ப வாழ முடியாத நிலைமை டைனோசர்களுக்கு ஏற்பட்டது. அதனால் படிப்படியாக அவை பூமியிலிருந்து அழிந்து போயின.

ரங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் புதிதாக மேலும் 2 முனைகளில் படை நடவடிக்கை தொடங்கப்படும்

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 11

வடக்கில் நான்கு இடங்களில் படை நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் படையினர் இனி மேல் ஆறு இடங்களில் படை நடவடிக்கைகளை மேற்கொள்ள வுள்ளனர்.

புதிதாக மேலும் இரண்டு முனைகளில் படையினர் தமது தாக்குதல்களை விரை வில் ஆரம்பிக்க உள்ளனர்

- இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்திருக்கிறார்.

வாதுவ, முள்ளிக்கொட, பிரிவேனா வில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டடத் திற்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்திருப் பவை வருமாறு:-

புலிகளின் தலைவர் தீட்டும் திட்டங் கள் அனைத்தையும் எமது புலனாய்வுத் துறையினர் எமக்குத் தெரிவித்து வரு கின்றனர்.

பிரபாகரன் எத்தகைய திட்டத்தையும் தீட்டினாலும் அது எமக்குத் தெரியவரும். அத்திட்டங்கள் அனைத்தையும் இராணுவ புலனாய்வுத்துறையினர் உன்னிப்புடன் அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். கோவில் நிகழ்வுகள் மற்றும் திருவிழாக் களில் பங்கேற்கும் அரசின் முக்கிய பிர முகர்களைக் கொலை செய்வதற்கு புலி கள் திட்டமிட்டுள்ளனர்.

இத்திருவிழாக்களில் சாதாரண பொது மக்கள் போன்று அனைத்து சோத னைகளுக்கும், முகம் கொடுக்கும் புலிகள், உள்ளே சென்று பிரமுகர்களின் பாதுகாப் புப்பிரிவினரின் ஆயுதங்களைப் பறித்து அதனைப் பயன்படுத்தி பிரமுகர்களைக் கொலை செய்யத்திட்டமிட்டுள்ளனர்.

வடக்கில் இடம்பெறும் படை நட வடிக்கையில் படையினர் விவேகத்துடன் செயற்பட்டு வரு கின்றனர். இதுவரை நான்கு இடங்களில் படை நடவடிக்கை களை மேற்கொண்ட படையினர் இனி மேல் ஆறு இடங்களில் நட வடிக்கைகளை மேற் கொள்ளவுள்ளனர்.

சில இடங்களில் புலிகளின் கண்ணி வெடிகள் மற்றும் பொறி வெடிகள் அதிக மாக இருப்பதால் படை யினரின் நகர்வுகள் காலதாமதமாகின்றன.

புலிகளுடனான போரை தீவிரமாக்கு மாறு சிலர் அரசை வலி யுறுத்துகின்றனர். அவர் களின் கருத்துகளை கேட்டுக்கொண்டு முட்டாள்தனமாக படை நடவடிக்கை களை ஆரம்பிக்க முடி யாது.

படையினர் இன்று உளவியல் ரீதியான பாதிப்புக்களுடன் படை நடவடிக்கை களைதொடர்ந்துகொண் டிருக்கும்போது பல இடங்களில் குண்டு கள் வெடிக்கின்றன.

குண்டுகள் வெடிப் பதால் படை நடவடிக் கையை நிறுத்திவிட முடியாது. அரசு தனது தாக்குதல்களைத் தொடரும் என்றார்.(சி)


சுவாமியே சரணம் ஐயப்பா



**வைகாசி மாத உத்தர உற்சவம்**

இன்று (11.06.2008) புதன்கிழமை உரும்பிராய் சந்தி சிவதர்மசாஸ்தா ஆலயத்தில் மாலை 5.30 மணிக்கு அபிஷேகம் பூசை பஜனை நடைபெறும்.

சரணம் ஐயப்பா

"பம்பா வாசனை துதிக்கபண்ணிய பாவம் பொடி பொடியாகும்"

உபயம்:வே.கந்தசாமி, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், உரும்பிராய்.

தேவஸ்தான குருசுவாமி தா.வாசுதேவக் குருக்கள



**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**

மண்ணில் 04 ✱ 01 ✱ 1944



விண்ணில் 16 ✱ 05 ✱ 2005

**திருமதி கந்தையா சிவமணி**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசமுடன் இணைந்த
இனிய உங்கள் முகம் எங்கள்
நெஞ்சை விட்டகலாது.

56/24, ஆத்திசூடி, கந்தர்மடம். (75147) - குடும்பத்தினர்.



**21 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



**திருமதி கணேசப்பெருமாள் உமாமகேஸ்வரி**

(பாக்கியம்)

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுத் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன், நாளை (12.06.2008) வியாழக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சோமரந் தோட்டம்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (75231)

தகவல்:
குடும்பத்தினர்.


## வீதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

நல்லூர்,ஜூன் 11

நல்லூர் பிரதேச சபைப் பகுதியிலுள்ள கோண்டாவில் குட்செட் வீதி புனரமைப் புக்கென ரூபா 2.5 மில் லியன் மகநெகும திட் டத்தின் கீழ் வழங்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தில் மகாத்மா காந்தி வீதி புனரமைப்புக்கு ரூபா 1.8மில்லியனும் முருக மூர்த்தி வீதி புனரமைப் புக் கென ரூபா 2 மில் லியனும் நிதி ஒதுக் கீடு செய்யப் பட்டுள் ளது. (202-111)

## பொங்கல் பெருவிழா

யாழ்ப்பாணம்,ஜூன் 11

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலயத்தில் நாளைமறுதினம் வெள் ளிக்கிழமை வைகாசிப் பொங்கல் பெருவிழா நடைபெறவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு விசேட அபி ஷேக ஆராதனை களும் தொடர்ந்து விஷேட பூசை பொங் கல் என்பனவும் இடம் பெறும். (202)

# நிகழ்வுகள்.... நிகழ்வுகள்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், கௌரவ விருந்தினர் ஆசிரியர் ஞானச்சந்திரமூர்த்தி, கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மற்றும் ஏனைய விரிவுரையாளர்களும் மங்கள இசையுடன் விழா மேடைக்கு அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் கணலாம்.



அண்மையில் படுகொலை செய்யப்பட்ட நாவாந்துறைப் பங்கின் முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி. எம்.எக்ஸ். கருணாரட்ணம் அடிகளாரின் நினைவாக இரத்ததான நிகழ்வு நடத்தப்பட்டது. அந்நிகழ்வில் எடுக்கப்பட்ட படம். (202)



நயினாதீவு கிராஞ்சிக்குழி வீதியை யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். வேலணைப் பிரதேசபை செயலாளர் கை.மகேந்திரலிங்கம் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்கள், பொதுமக்களை படத்தில் காணலாம். (படம்:




உலக குடும்பநல சேவையாளர் தினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் குடும்பநல சேவையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வினை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அண்மையில் நடத்தினர்.

லயன் சீமாட்டிகளான திருமதி உ. சண்முகநாதன், திருமதி இ. சற்குணதேவன், திருமதி ச. ஸ்ரீபிரகாஸ், திருமதி ச. ஜெயபாலன் ஆகியோருடன் கௌரவிக்கப்பட்ட குடும்பநல சேவையாளர்களைப் படத்தில் காணலாம். (207)



*கனடா, ஸ்கா பரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற ச.வே. பஞ்சாட்சரத்தின் "அன்னை மண்" 51 சின்னஞ் சிறுகதைகள் நூல் வெளியீட்டு விழாவில் முன்னாள் பேராசிரியர் இ.பாலசுந்தரத்திடமிருந்து முதற் பிரதியைக் கனடா 'பாபு கேற்ரறிங்' உரிமையாளர் கந்தையா இராஜகுலசிங்கம் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.*

*நூலாசிரியரும் படத்தில் காணப்படுகின்றார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கொழும்புக்கு எதிராகத் திரளும் சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு

''சர்வதேச சமூகம் இலங்கையை மறந்து விட வில்லை என்பதை இலங்கை அரசும் அதன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் புரிந்து கொள்ள வேண்டும்.'' - என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்திருக்கின்றது.

''இலங்கையில் நிலைமை மிகவும் மோசமடைந்து செல்வதால் அந்த நாட்டின் போக்கு உலகின் கவலைக்குரிய - கவனத்துக்குரிய - விடயமாக மாறியுள்ளது.

''ஆனால், இலங்கை நிலைமை தொடர்பாக சர்வ தேச சமூகமும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புகளும் வெளியிட்டு வரும் கவலையை செவிமடுக்க இலங்கை அரசு தயாராக இல்லைப் போலத் தோன்றுகின்றது.

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இது உலகினால் மறக்கப்பட்ட ஒரு மோதல் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.''

- இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபையின் தென்னாசியாவிற்கான இயக்குநர் சாம் ஜரிவி தெரிவித்திருக்கின்றார்.

அதாவது, இலங்கை நிலைமை தொடர்பான சர்வ தேச சமூகத்தின் கருத்து நிலைப்பாடு, இலங்கைக்கு உறைப்பாக உணர்த்தப்பட்டாலும் அக்கருத்தை 'செவிடன் காதில் ஊதிய சங்கு' ஆகக் கருதி, கவனத்தில் எடுக்காமல் தன்போக்கில் இலங்கைத் தலைமை கருமம் ஆற்றுகின்றது என்பதையே அவர் இப்படி மென்மை யான வார்த்தையினால் சுட்டிக்காட்டுகின்றார்.

'நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள். நாம் செய்வதைத்தான் தொடர்வோம். உங்கள் கருத்தைக் கவனத் தில் கூட எடுக்க மாட்டோம்' - என்பது போலத் தனது போர்வெறித் தீவிரத்தில் கொழும்பு அரசு பிடிவாதமாய் இருப்பதைத்தான், மேற்படி இராஜதந்திர வார்த்தைக ளால் நாசூக்காக சர்வதேச மன்னிப்புச் சபையின் பேச் சாளர் கோடிகாட்டியிருக்கின்றார்.

'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' - என்பார்கள்.

கொழும்பு அரசின் இப்போதைய போக்கும் கூட அதன் மூர்க்கத்தனத்தின் உச்சம்தான்.

ஆகவே, அந்த மூர்க்கத்தனம் காரணமாகத் தான் கொண்ட போர் வெறித் தீவிரத்தைக் கொழும்புத் தலைமை கைவிடப் போவதில்லை என்பது உறுதி.

அதே மூர்க்கத்தனம் காரணமாக இந்த விடயத்தில் சர்வதேச சமூகத்தின் நல்லாலோசனைகளையோ, வழிகாட்டல்களையோ கூட இலங்கை கவனத்திற் கொள்ளப் போவதில்லை என்பதும் தெளிவு.

ஆனால் அதற்காக - சர்வதேச சமூகத்தின் கருத்து நிலைப்பாட்டை - கொழும்பு சுலபமாகத் தூக்கியெறிந்து விட்டு, தன்பாட்டில் மனித உரிமைகளை அத்துமீறும் வகையில், கீழ்த்தரமாகச் செயற்படவும் சர்வதேச சமூகம் அனுமதிக்காது என்பதும் நிச்சயம்.

அதையே, 'இலங்கை விவகாரம் சர்வதேச சமூகத்தினால் மறக்கப்பட்ட விடயமல்ல என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கவனத்தில் கொள்ளவேண்டும். - என சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி சுட்டிக் காட்டுகின்றார்.

இதேசமயம், 'உலகில் மிகச் சிக்கலான பிணக்குகள் நிலவும் நாடுகள்' - என்ற வரிசையில் இலங்கையும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

2007 ஆம் ஆண்டின் மோசமான ஆயுதப் பிணக்கு கள் நிலவிய 14 நாடுகளில் நான்கில் ஆயுதப் பிரச்சினை மிகப் பெரும் சர்ச்சையாக உருவாகியிருக்கின்றது என சுவீடனைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'ஸ்டொக் ஹோம் சர்வதேச அமைதி ஆய்வு நிறுவனம்' என்ற சமா தான அமைப்பு அடையாளம் கண்டிருக்கின்றது.

இலங்கை, ஆப்கானிஸ்தான், மியன்மார் (பர்மா) மற்றும் துருக்கி ஆகிய நாடுகளிலேயே இந்தப் பிணக்கு மிகத் தீவிரமடைந்திருப்பதாக அந்த அமைப்பின் 2007 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு உலகின் கவனம் இலங்கை பக்கம் திரும்பினாலும், இலங்கை அரசுக்குத் தனது நாட்டின் மக்கள் என்று, தான் உரிமை கோரும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகத் தான் தொடுத்திருக்கும் பெரும் போர்த் தாக்கு தல் நடவடிக்கைத் தொடரை நிறுத்தும் உத்தேசம் ஏதும் இல்லை என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

இப்படிச் சர்வதேச சமூகத்தின் கருத்தையும், கருத்தையும், எதிர்பார்ப்பையும் துச்சமாக நிராகரித்து, தன் பாட்டில் போர்வெறிப் போக்கோடு, விட்டேத்தியாக நடந்துகொள்ளும் கொழும்பு அரசுத் தலைமை குறித்து சர்வதேசம் என்ன செய்யப் போகின்றது?

தொடர்ந்தும் வெறும் கண்டன அறிக்கைகளையும், அதிருப்தி அறிவிப்புகளையும் வெளியிட்டுக்கொண்டு சர்வதேச சமூகம் - ஒன்றும் செய்ய இயலாமல் - பார்த்திருக்கப் போகின்றதா? அல்லது கொழும்புக்கு எதிராகக் காத்திரமாக நடவடிக்கை ஏதும் எடுத்து இலங்கையை வழிக்குக் கொண்டுவரப் போகின்றதா?

கொழும்பு அரசுத் தலைமை இலங்கையில் பயங்கரவாதத்துக்கு எதிராகத் தான் பெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கின்றது என்ற பெயரில் அரச பயங் கரவாதம் ஒன்றை இங்கு கட்டவிழ்த்து விட்டுள்ள நிலை யில், அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் அவசரமாக - விரைந்து - நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் எழுந்திருக்கின்றது.

அத்தேவையை சர்வதேச சமூகம் நன்கு புரிந்து கொண்டிருந்தாலும் கூட அது எவ்வாறான பதில் நடவடிக்கையை எடுக்கப்போகிறது என்பதே இன்றைய கேள்வியாகும்.

சர்வதேச கருத்தியல் நிலைப்பாடு கொழும்பு நிர்வாகத்துக்கு எதிராகக் கருக்கட்டித் திரண்டு வருகையில், அதைப் புரிந்து கொள்ளாமல் - அல்லது அதைக் கருத்தில் எடுக்காமல் - செயற்படும் கொழும்பு, இறுதியில் இதன் விளைவாக விபரீதத்தை சர்வதேச மட்டத்தில் சம்பாதிக்கப் போகின்றது என்பது மட்டும் வெளிச்சம்.

# யாழ்ப்பாணத்தில் சி.டி.எம்.ஏ தொலைபேசி இணைப்பு வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தம்

## அழைப்புக்களைப் பெறுவதில் நெருக்கடி நிலை காரணமாம்

யாழ்ப்பாணம், ஜூன்11

யாழ்ப்பாணத்தில் ரெலிக்கொம் நிறுவனத்தின் 'சி.டி.எம்.ஏ சிற்றிலிங்' தொலைபேசி இணைப்புப் பணிகள் நடைமுறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே அதிக எண்ணிக்கையான தொலை பேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள் ளமையால் அழைப்புகளைப் பெறுவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டு வருகின்றது. குறிப்பாக இரவு வேளைகளில் அழைப்புகளைப் பெறுவதற்கு நீண்டநேரம் செல்கின்றது. இதனையடுத்தே புதிதாக சி.டி.எம்.ஏ. தொலை பேசி இணைப்புகளை வழங்கும் நடைமுறை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் ரெலிக்கொமின் 'மோட்டோ றோலர்' தொலைபேசி சேவைகள் செயலிழந்ததையடுத்து அதற்குப் பதிலாக 'சி.டி.எம்.ஏ சிற்றிலிங்' தொலைபேசி இணைப்புகளை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

'மோட்டோறோலா' பாவனையாளருக்கு முதற்கட்டமாகச் சி.டி.எம்.ஏ இணைப்புக்கள் வழங்கப்பட்டன. பின்னர் புதிதாக விண்ணப்பிப்போருக்கும் இணைப்புக்கள் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. கிராம அலுவலரின் சிபார்சுக் கடிதத்துடன் பாதுகாப்புத் தரப்பினரின் அனுமதி பெற்றே சி.டி.எம்.ஏ. இணைப்புகள் வழங்கப்பட்டன.

இதனையடுத்துப் பெருமளவானோர் சி.டி.எம்.ஏ இணைப்புக்களைப் பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தார்கள். நாளாந்தம் பெரும் எண்ணிக்கையானோர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க குவிந்தமையால் ரெலிக்கொமின் யாழ்.பிராந்திய அலுவலகம் எந்நேரமும் சனக் கூட்டமாகக் காணப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில்கேபிள்தொலைபேசிச் சேவைகளைப் பெறுவதற்கு வசதியற்ற இடங்களில் உள்ள அரச அலுவலகங்கள், வைத்தியசாலைகள், சமய நிறுவனங்கள், பாடசாலைகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் அலுவலகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் உட்படப் பல்வேறு இடங்களுக்கும் தனியார் வீடுகளுக்கும் இந்தத் தொலைபேசி இணைப்புகள் வழங்கப் பட்டன.

அதிக எண்ணிக்கையான தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டமையால் அழைப்புகளைப் பெறுவதில் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து புதிய இணைப்புக்களை வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

கடந்த மூன்று தினங்களாக யாழ்ப்பாணத்தில் சி.டி.எம்.ஏ தொலைபேசி இணைப்புக்கள்செயலிழந்துள்ளன. (50)

# சிவபூமி கண்காட்சி இன்றும் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூன்11

கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் கல்வி கற்கும் மாற்று ஆற்றலுள்ள மாணவர்களின் கல்விக் கண்காட்சி இன்று காலை 9மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

இக் கண்காட்சி நேற்று செவ்வாய்க் கிழமையுடன் முடிவடைய இருந்தது. பெற்றோர்கள் பலரின் வேண்டுகோளுக்கு இணங்க அது இன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(202)

# தென்மராட்சிப் பிரதேசத்தின் 155 குடும்பங்களுக்கு சுயதொழில், வீட்டுத் திட்ட உதவி நாளை

யாழ்ப்பாணம், ஜூன்11

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ். அலுவலகத்தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 155 பேருக்கு சுயதொழில் உதவி மற்றும் வீடமைப்புத் திட்டம் ஆகியவற்றுக்கான கொடுப்பனவுக் காசோலைகள் வழங்கப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவிருந்த இந் நிகழ்வு நாளை நடைபெறுமெனவும் அறிவித்துள்ளார்.

பிரதேசத்தில் பெண்களை தலைவர்களாகக் கொண்ட 75 குடும்பங்களுக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் -

மகிந்த சிந்தனை மற்றும் அபிவிருத்தித்திட்ட வீடமைப்புத் திட்டப் பயனாளிகள் 77 பேருக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவாகத் தலா 25 ஆயிரம் ரூபாவும் -

மகிந்த சிந்தனை வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு முதலாம் கட்ட கொடுப்பனவாக தலா 25 ஆயிரம் ரூபாவும் - வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தத் திட்டங்களுக்குத் தெரிவு செய்யப் பட்ட குடும்பங்களை அன்றைய தினம் காலை 9 மணிக்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ். அலுவலகத்திற்கு செல்லுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (202-207)

# பிரதேச சபைகளுக்கு ஒதுக்கீடு செய்த நிதிமூலம் 60 வீத வேலைகளையே மேற்கொள்ளலாம்

## பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தகவல்

நல்லூர், ஜூன்11

ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் மூலம் பிரதேச சபைகளில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள வேலைகளில் 60 வீதமானவையே தற்போது மேற்கொள்ளலாம்.

இத் தகவலை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடைகள், மாகாண சபை குறித்து ஒதுக்கீடு செய்யப்பட்ட அபிவிருத்திக்கான நன்கொடைகளினூடாக மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்களில் 60 வீதமான வேலைகளே மேற்கொள்ளப்படும்.

குறிப்பிட்ட இரு பிரிவுகளுக்குமான நிதிகளின் மூலம் இடம்பெற வேண்டிய வேலைத் திட்டங்கள் மறு அறிவித்தல் வரும்வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தகவல் குறித்து உதவி உள்ளூராட்சி ஆணையாளரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வேலைத் திட்டங்கள் எதுவும் முற்றாக நிறுத்தப்படவில்லை எனவும் முழுமையான நிதி கிடைக்காமையினால் 60 வீதமான வேலைகள் மட்டுமே தற்சமயம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (202-111)

# கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் பயிற்சிக்கு யாழிலிருந்து மேலும் 10 மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஜூன்11

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை-2007 இல் உயர்புள்ளி பெற்ற மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சையின் மூலம் தேசிய கணித, விஞ்ஞான ஒலிம்பியாட் பயிற்சிக்கு யாழ்.வலயத்திலிருந்து மேலும் 10 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இராமச்சந்திரன் நிதர்சினி, செல்வநாயகம் சுபேந்திரா, புவேந்திரன் பகீரதன், சக்திவேல் சாகித்தியன், சிவபாலன் பராபரன், ஜெயசோதி ஜெயபைரவி, காங்கேயன் துசாந்தி, நாகராஜா பமீரா, முருகேசம்பிள்ளை துலக்ஸன், கணேசலிங்கம் பிருந்தன் ஆகிய மாணவர்களே தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இம் மாணவர்களுக்கான பயிற்சிநெறி எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இயங்கும் ஆசிரியர் நிலையத்தில் நடைபெறும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (202)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 30 | 12.06.2008 வியாழக்கிழமை |
| திதி: | நவமி பி.ப. 01.59 வரை |
| நட்சத்திரம் : | அத்தம் பி.இ. 04.41 வரை |
| சுபநேரம் : | 07.22 - 08.52 |
| ராகுகாலம் : | 01.22 - 02.52 |

# மாணவர்கள் கௌரவிப்பு

நாவற்குழி, ஜூன்11

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கடந்த வருடம் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் அதிபர் க.ஞானலிங்கம் தலைமையிலே நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தனும் சிறப்பு விருந்தினராகச் சாவகச்சேரி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கமும் கலந்துகொள்வர். (202-288)

மந்திகை, ஜூன்11

பருத்தித்துறைப் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கடந்த வருடம் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 21 மாணவர்களையும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இக்கௌரவிப்பு நிகழ்வு இன்று புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா கலந்துகொள்வார். (202-218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் படியுங்கள்
பிருந்தாவன் கல்லூரி
பங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.
Join With 2 A/L Passes
Courses to Commence in July
Fix an appoinment for interview
Contact: 0777-317043
Company Secretarial Services (Pvt) Ltd
285C 1/1, Stanley Tillakaratne Mawatha,
Jubilee Post, Nugegoda.

## வீட்டு மின்னிணைப்பு பயிற்சிநெறி

வேலணை, ஜூன்11

கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தில் வீட்டு மின் இணைப்புப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்களை உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-267)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 07 05 1920



மறைவு 12 05 2008

### அமரர் தம்பு இரட்ணலிங்கம்

(உரிமையாளர், பொப்பியூலர் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

காலத்தை பொன்னாகக் கருதி கடமைகளைக் கண்ணாக
கருதி வாழ்ந்தீர்கள் ஐயா...
கண்ணை இமை காப்பது போல் எம்மைக் காத்து
வந்தீர்கள் ஐயா...
கணப்பொழுதில் எமைப் பிரிந்து எமையெல்லாம்
சோகத்தில் ஆழ்த்திவிட்டீர்கள் ஐயா...
காலன் உங்களை அணுகாமல் காக்கும் சக்தி இன்றிக்
காலமெல்லாம் கலங்குகின்றோம் ஐயா...
எமது குடும்பத்தின் குலவிளக்காய் அன்போடும் பண்போடும்
வாழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய எமதருமைத் தந்தையே....

உங்கள் ஆத்மா இறைவனடி சேர வேண்டுகின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.06.2008) புதன்கிழமை காலை 9 மணிமுதல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

(சி/553178)

அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவமயம்

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் வைகாசி மாதம் 32ஆம் நாள் (14.06.2008) சனிக்கிழமை முற்பகல் 10.54 முதல் 12.24 மணி வரையுள்ள சுவாதி நட்சத்திரமும் சிங்க இலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் எமது புதல்வி

திருநிறை செல்வி **ரஜிதா**

அவர்களுக்கு எமதில்லத்தில் பூப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மங்களச் செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/553179)

'ரங்கூன் இல்லம்',
ஆத்தியடி,
பருத்தித்துறை.

தங்கள் நல்வரவை நாடும்:
வே.தியாகராசா - சுசிலா
தம்பதியர்.
கிராம அலுவலர், அல்வாய் கிழக்கு.

## மணிவிழா வாழ்த்து

11.06.2008



### திரு.கபிரியேல்பிள்ளை-செபஸ்தியாம்பிள்ளை

S.L.P.S. - 2- I, (B.A., Dip. in Edu., SP.TRD)

(அதிபர், யாழ்.நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர்)

எமது வித்தியாலயத்தில் அர்ப்பணிப்புடன் கூடிய அதிபர் சேவையினை, மணிவிழா நாளாகிய இன்று (11.06.2008) புதன்கிழமை நிறைவுசெய்து, ஓய்வுபெறும் எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய அதிபர் அவர்கள், சகல சௌபாக்கியங்களையும் பெற்று தமது குடும்பத்தினருடன் நிறைவாக நீடுழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம். அவர் சேவைக்காலத்தில் எமது வித்தியாலயத்தில் ஆற்றிய சகல பணிகளையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

'இறையாசி என்றும் அவருடன் இருப்பதாக'!

பாடசாலைச் சமூகம்.

(75243)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



### அமரர் தருமலிங்கம் சிவநேசன்

(குட்டி)

ஆண்டவன் படைப்பு 08.01.1975

அநியாய அழிப்பு 28.04.2008

அன்பின் திருவுருவே பண்பின் இமயமே!
பாசத்தின் உறைவிடமே அழியாத ஓவியமே!
அன்னைதனைப் பிரிந்து தந்தையின்
அரவணைப்பில் வளர்ந்த தயாளகுண சீலனே!
இனிய மனையாளுடன் இன்பமாய் வாழ்ந்த வேளை
கண்பட்டதோ நின் இல்லறக் கோலத்தில்
புண்பட்டு வீழ்த்தியே மாய்த்திட்டார் உன் உயிரை
தனியாகத் தவிக்கின்றோம் வாழ வழியேதும் அறியாமல்
என்ன பாவம்தான் செய்தோம் உமைப் பிரிந்து வாழ்ந்திடவே
எம் உயிர் உள்ளவரை தீராது இத் துயரம்
உங்கள் நினைவோடும் நிழலோடும் நிதமும்
நாம் வாழ்கின்றோம் என்றும் வாழ்ந்திடுவோம்
ஐங்கரனின் தாள்களில் நிந்தன் ஆத்மா சாந்தி பெறட்டும்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(75242)

பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

என்றும் தங்கள் நினைவுடன்:
சி.மதனிகா (மனைவி), தருமலிங்கம் (தந்தை).

## சிறுவர் உழைப்பிற்கெதிரான விழிப்புணர்வு ஊர்வலம்

கரவெட்டி, ஜூன்11

"சிறுவர் உழைப்பிற்கெதிரான விழிப்புணர்வு" தினத்தை முன்னிட்டு, நாளை வியாழக்கிழமை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் சாந்திகத்தினர் கரவெட்டிப் பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றினை நடத்தவுள்ளனர்.

மேற்படி ஊர்வலம் கரவெட்டி, துன்னாலையில் இருந்து பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பித்து அதிக அளவில் சிறுவர் ஊழியம் இனங்காணப்பட்ட இடங்கள் ஊடாக வலம் வந்து மாலை 4.30 மணியளவில் கரவெட்டிப் பிரதேச செயலக முன்றலில் முடிவடையும் எனத் தெரிவிக்கப்பட்டது. (202-70)

## மரண அறிவித்தல்

### கந்தவனம் முருகேசு (சபா)



தீராவத்தை, கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கந்தவனம் முருகேசு (சபா) அவர்கள் கடந்த 08.06.2008 ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புக் கணவரும் சாரதாதேவி, சகுந்தலாதேவி, விமலதாஸ், கணேசதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவஞானசிங், யோகநாதன், நளாயினி, செல்வமலர் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஜனகன், சாதனா, சிந்துஜன்,, சிந்துஜா, நிதுஷன், தமிழினி, யாழினி, தர்மினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர் இராசம்மா, அமரர் சின்னத்துரை, கந்தசாமி, செல்லப்பாக்கியம் (கரணவாய்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(75241)

தீராவத்தை,
கரணவாய் மேற்கு, கரவெட்டி.

தகவல்:
பொ.நல்லையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யூரோ கிண்ணக் கால்பந்தாட்டம்

# உலகச் சம்பியன் இத்தாலிக்கு அடி

## 3-0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்திடம் தோல்வி



வான் நிஸ்டல்



வெஸ்லி ஸ்னீடர்



வான் பிரான்க்ஹாஸ்ட்

பேர்ன், ஜூன் 11

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் உலகச் சம்பியனான இத்தாலிக்கு பலத்த அடி விழுந்துள்ளது. இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை நடந்த லீக் போட்டியில் இத்தாலி அணியை 3-0 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்து வீழ்த்தி பெரு வெற்றியைப் பதிவுசெய்தது.

16 அணிகள் பங்கேற்கும் 13ஆவது ஐரோப்பியக் கிண்ணக் கால்பந்தாட்டம் சுவிற்ஸர்லாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகளில் நடைபெற்றுவருகின்றது. நேற்று சுவிற்ஸர்லாந்தின் போர்னில் நடைபெற்ற 'சி' பிரிவுக்கான லீக் ஆட்டமொன்றில் உலகச் சம்பியனான இத்தாலி அணி, நெதர்லாந்து அணியை எதிர்கொண்டது. இப்பிரிவில் இடம் பெற்றுள்ள நான்கு அணிகளும் பலம் வாய்ந்தவை என்பதால் ஒவ்வொரு போட்டியும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

ஆட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே நெதர்லாந்து வீரர்கள் ஆக்ரோசமாக ஆடினர். இதன்பலனாக 26ஆவது நிமிடத்தில் வான் நிஸ்டல் நெதர்லாந்து அணிக்கு முதல் கோலைப் பெற்றுக்கொடுத்தார். இது சர்ச்சைக்குரிய கோலாக அமைந்தது. இந்தக் கோலை அடித்தபோது நிஸ்டல், 'ஓவ் சைட்' பக்கம் இருந்தார் என இத்தாலி வீரர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். எனினும் நடுவர் அதனை நிராகரித்தார்.

முன்னிலை பெற்ற உற்சாகத்தோடு நெதர்லாந்து வீரர்கள் சிறப்பாக ஆடினர். முதல் கோல் அடித்து 5 நிமிடங்கள் கடந்த நிலையில் - ஆட்டத்தின் 31ஆவது நிமிடத்தில் மீண்டும் ஒரு கோல் நெதர்லாந்துக்குக் கிடைத்தது. டிரிக் குயாட்டிடம் இருந்த பந்தைப் பெற்ற வெஸ்லி ஸ்னீடர், தலையால் மோதி 2ஆவது கோலைப் பெற்றுக்கொடுத்தார். முதல்பாதி முடிவில் இத்தாலி அணியால் பதில் கோலைப் போட முடியாமல் போனது. முதல்பாதி முடிவில் நெதர்லாந்து அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இத்தாலி வீரர்கள் துடிப்புடன் ஆடினர். கோல் அடிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை இத்தாலி வீரர்களான லூகா ரோனி,அன்ரோனியா டீ நதாலி ஆகியோர் தவறவிட்டனர். நெதர்லாந்து வீரர்கள் சிறப்பாகத் தடுப்பாட்டம் ஆடி அசத்தினர்.

இந்நிலையில் ஆட்டத்தின் 80ஆவது நிமிடத்தில் இத்தாலிக்கு மீண்டும் ஒரு அடி விழுந்தது. இந்த முறை பந்தைப் பெற்ற வான் பிரான்க்ஹாஸ்ட், நெதர்லாந்து அணிக்கு மூன்றாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

உலகச் சம்பியனான இத்தாலியால் கடைசி வரை ஒரு கோல் கூடப் போடமுடியவில்லை. இதனால் அந்த அணி 0-3 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

இந்தத் தோல்வி இத்தாலி ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அதே நேரத்தில் நெதர்லாந்து ரசிகர்கள் இந்த வெற்றியை கொண்டாடி வருகின்றனர். 1978ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் இத்தாலியை வீழ்த்திய பிறகு நெதர்லாந்து அந்த அணியை முதன்முதலாகத் தோற்கடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரான்ஸ், ருமேனிய அணிகள் மோதிய 'சி' பிரிவு போட்டி வெற்றி தோல்வியின்றி சமனிலையில் முடிந்தது. கோலடிக்க இரு அணி வீரர்களும் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

சுவிற்ஸர்லாந்தின் சூரிச் நகரில் நடந்த 'சி' பிரிவு போட்டியில் இரண்டு முறை யூரோ சம்பியனான பிரான்ஸ் அணி, ருமேனியாவை எதிர்கொண்டது. பிரான்ஸ் அணியில் அணித் தலைவர் பேட்ரிக் வியாரா நீக்கப்பட்டு, லில்லியன் தூறம் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

தொடக்கத்திலிருந்தே இரு அணிகளும் வெற்றிக்காகக் கடுமையாகப் போராடின. இரு அணி வீரர்களும் அடிக்கடி உரசிக் கொண்டனர். ருமேனியாவின் டேனியல் நிக்காலே (27ஆவது நிமிடம்), கோஸ்மின் காண்ட்ரா (40ஆவது நிமிடம்), டோரின் கோயின் (43ஆவது நிமிடம்) ஆகியோருக்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது. முதல் பாதி கோலின்றி முடிந்தது.

ஆட்டத்தின் 49ஆவது நிமிடத்தில் கிடைத்த அரிய வாய்ப்பை பிரான்ஸின் பிளோரன்ட் மலுடா தவறவிட்டார். அடுத்த மூன்றாவது நிமிடத்தில் ருமேனியாவின் முட்டு 'பிறி ஹிக்'கில் அடித்த பந்து கோல் கம்பத்தைத் தாண்டி நேராக ரசிகர்களை நோக்கிச் சென்றது. 57 மற்றும் 64ஆவது நிமிடத்தில் கிடைத்த இரண்டு வாய்ப்புகளை பிரான்ஸின் பென்சிமா கோட்டை விட்டார். இரண்டாவது பாதியிலும் இரு அணிகளும் கோல் அடிக்காததை அடுத்து போட்டி வெற்றிதோல்வியின்றி சமனிலையில் முடிந்தது.

'சி' பிரிவில் இடம்பெற்றுள்ள நான்கு அணிகளும் சமபலம் வாய்ந்தவையாகக் கருதப்படுவதால், முதல் போட்டியில் வெற்றிபெறத் தவறிய முன்னணி அணிகளான இத்தாலி, பிரான்ஸ் ஆகியன அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பு சிக்கலாகியுள்ளது.

## அனுமனை வணங்கும் ஒபாமா!

நியூயார்க் ஜூன் 11

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பாகப் போட்டியிடும் பராக் ஒபாமா சிறிய அளவிலான அனுமன் படத்தை தன்னுடன் வைத்திருக்கிறார்.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'ரைம்ஸ்' பத்திரிகை இந்தப் படத்தை வெளியிட்டுள்ளது. அனுமன் கடவுளின் நல்லாசி தேவை என்று எதிர்பார்த்தோ அல்லது அதிஷ்டத்துக்காகவோ அவர் இந்தப் படத்தை வைத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதிதேர்தலில் போட்டியிடும் முதல் கறுப்பினத்தவர் இவர் தான். இவரது தந்தை கென்யா நாட்டவர். இவரது தாய் அமெரிக்கர். ஒபாமா சிறுவனாக இருந்த போது, அவரது பெற்றோர் இந்தோனேஷியாவில் வசித்தனர். அந்நாட்டில் இந்து மதமும் பிரபலமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே அப்போது அவருக்கு அனுமனை வணங்கும் பழக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ஈராக்கில் இருக்கும் அமெரிக்க இராணுவ வீரரின் பிரேஸ்லெட், பாடகி மடோனா,ஒரு குழந்தை ஆகியோரின் படங்களும் ஒபாமாவிடம் எப்போதும் உள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் குடியரசுக்கட்சி வேட்பாளரான மெக்கெய்ன தனது கையில் எப்போதும் ஒரு ரப்பர் பாண்ட் கட்டியிருக்கிறார். அதை அவர் அதிஷ்டப் பொருளாக கருதுகிறாராம் என்றும் 'ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## புத்தளம் நகரசபையின் செயலாளர் உட்பட 3 உயரதிகாரிகள் நையப்புடைக்கப்பட்டனர்

### நள்ளிரவில் பயங்கரம்; ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஜூன் 11

புத்தளம் நகர சபையின் செயலாளர், பொதுச்சுகாதார பரிசோதகர் மற்றும் திட்டமிடல் அதிகாரி ஆகியோர் நேற்று அதிகாலை ஒருமணியளவில் அவர்களது உத்தியோகபூர்வ இல்லத்துக்குள் அத்துமீறிப் புகுந்த ஒரு குழுவினரால் நையப்புடைக்கப்பட்டனர். அங்கிருந்த பொருள்களும் சேதமாக்கப்பட்டன.

காயமுற்ற மூவரும் தற்போது புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த நகரசபை உறுப்பினர் ஒருவர் தலைமையில் சென்ற கும்பலே இத்தாக்குதலை மேற்கொண்டது எனக் கூறப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து நகரசபையின் அனைத்து ஊழியர்களும் நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இது குறித்து நகரபிதா என்.எம்.நஸ்மி தகவல் தருகையில் -

''காட்டுமிராண்டித்தனமான இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். சம்பந்தப்பட்ட உறுப்பினர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படும் வரை பணிப்பகிஷ்கரிப்புத் தொடரும்.'' - என்றார். (சி)

## முஷாரப்பிற்கு எதிராகத் தீர்மானம் பாகிஸ்தான் மக்கள் கட்சி முடிவு

இஸ்லாமாபாத், ஜூன் 11

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் மீது நாடாளுமன்றில் குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவந்து நிறைவேற்ற பாகிஸ்தான் மக்கள் கட்சி முடிவு செய்துள்ளது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் முஷாரப் ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

முஷாரப் மீது குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவரும் முடிவு குறித்து பாகிஸ்தான் மக்கள் கட்சியின் துணைத்தலைவர் ஆசிப் அலி சர்தாரி சவூதி அரேபியா உள்ளிட்ட வெளிநாடுகளின் தலைவர்களிடம் தெரிவித்திருக்கின்றார் என உள்ளூர் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அரசமைப்பின் சட்டபூர்வமான ஜனாதிபதியாக முஷாரப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், முஷாரப் வகித்துவரும் பதவியின் காரணமாகவே அவருடன் செயல் அளவிலான உறவு வைத்திருக்கின்றார் என்றும் சர்தாரி கூறியுள்ளார்.

''தனி மனிதர்களுடனான உறவு மூலம் நிலையான ஆட்சியைத் தரமுடியும் என்பதில் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு நம்பிக்கை கிடையாது. ஒரு நிலையான அரசியல் அமைப்பை உருவாக்கவும் அமைப்புகளைப் பலப்படுத்தவும்தான் கட்சி போராடியிருக்கிறது. எந்தக் காலத்திலும் எந்தச் சர்வாதிகாரியையும் கட்சி ஆதரித்ததில்லை. இனிமேலும் ஆதரிக்காது'' - என்றார் சர்தாரி.

## முஸ்லிம் இளைஞர் புத்தளத்தில் கடத்தல்

புத்தளம், ஜூன் 11

புத்தளம் நகர மத்தியில் அமைந்துள்ள சந்தைக்கு அருகில் நின்ற முஸ்லிம் ஒருவர் நேற்றுமுற்பகல் 11.30 மணியளவில் வெள்ளை வானில் வந்த 'ர்கள் எனக்கூறப்படும் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பீ.முஹம்மது நிஸ்த்தார் (வயது - 35) என்ற இளைஞரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவராவர்.

சம்பவம் தொடர்பில் புத்தளப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (சி)

## குண்டுத் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த தெற்கில் விசேட பாதுகாப்புத் திட்டம்!

கொழும்பு, ஜூன் 11

கொழும்பிலும், அதனை அண்டிய பிரதேசங்கள் மற்றும் நகரங்களிலும் பொதுமக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டு வரும் குண்டுத்தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தும் வகையில் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்திருக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் அரசின் உத்தியோகபூர்வ இணையத்தில் அவர் குறிப்பிட்டிருப்பவை வருமாறு:-

யுத்தமுனையில் தொடர் தோல்விகளைச் சந்தித்துவரும் விடுதலைப் புலிகள் தமது இயலாமையை மூடி மறைப்பதற்காகப் பொதுமக்களை இலக்குவைத்து பஸ்களிலும், ரயில்களிலும் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். புலிகள் இவ்வாறான தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொள்ளக்கூடும் என்பதால் கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் பாதுகாப்பு பன்மடங்காகஅதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட ஒழுங்கமைப்பின் படி, முப்படையினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர் ஆகியோர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் ஒவ்வொரு கிராமங்களிலும் அமைக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களும் உஷார்படுத்தப்பட்டிருக்கின்றன.

பொதுமக்கள் தமது சுற்றுச்சூழல் குறித்து கவனம் செலுத்தவேண்டும். சந்தேகத்திற்கிடமான நபர்களின் நடமாட்டங்கள் குறித்து விழிப்பாகச் செயற்பட்டு முப்படையினரும் பொலிஸாரும் முன்னெடுத்துவரும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மக்கள் பூரண ஒத்துழைப்புகளை வழங்கவேண்டும் - என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுமக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் குண்டுத் தாக்குதல்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக ரயில் மற்றும் பஸ் நிலையங்களில் வானொலி, தொலைக்காட்சி மற்றும் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அடிக்கடி விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு பொலிஸ் தலைமையகம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

தெற்கில் அமைதியான சூழ்நிலையைக் குழப்புவதன் மூலம் வடக்கில் படையினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைக் குழப்புவதே தீயசக்திகளின் நோக்கமாகும். இதனை உணர்ந்து பொதுமக்கள் சிந்தித்துச் செயற்படுவதுடன், புத்திசாதுரியமாகவும், அவதானத்துடனும் செயற்படவேண்டும் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வாகரைக் காட்டில்கிளைமோர்கள் மீட்பு

கொழும்பு, ஜூன் 11

மட்டக்களப்பு, வாகரைக்காட்டுப் பகுதியிலிருந்து கிளைமோர்க்குண்டுகள் உட்பட சில வெடிபொருட்களைப் பொலிஸார் நேற்றுமுன்தினம்பிற்பகல் 2.15 மணியளவில் மீட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது கிளைமோர்க்குண்டுகள் - 43, மோட்டார் ஷெல்கள் - 05 மற்றும் கைக்குண்டுகள் - 25 ஆகியவற்றை மீட்டனர் என்று கூறப்பட்டது.

பின்னர் அந்தப் பகுதியில் பொலிஸார் மேலதிக தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குக!

# பொது நலவாய மாநாட்டு மண்டபத்துக்கு முன்னால் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முழக்கம்!

யாழ்ப்பாணம், ஜூன்11

தமிழ்மக்களுக்கு எதிரான போரை நிறுத்தி அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்க வேண்டும் என்று கோரி லண்டனில் மாபெரும் ஆர்ப்பாட்டப்பேரணி நேற்று இடம்பெற்றது.

லண்டனில் நடைபெறும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்ட பொதுநலவாய மாநாடு நடைபெறும் மார்ல்பரோ மண்டபத்துக்கு முன்னாள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நண்பகல் 12.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 3,000 - க்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

பல்லின மக்களும் கலந்துகொண்டு ஸ்ரீலங்கா அரசுக்கு எதிரான தமது வன்மையான கண்டனத்தை தெரிவித்தனர்.

தமிழ் மக்களுக்கு எதிரான போரை நிறுத்தக் கோரியும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமைகள் மீறல்களை நிறுத்தக் கோரியும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் முழக்கம் எழுப்பினர்.

மக்கள் கூட்டம் எதிர்பார்ப்பதனை விட அதிகமாக வந்து அலை மோதியதால் ஆர்ப்பாட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட இடம் காவல்துறையினரால் மேலும் விரிவாக்கப்பட்டு பாதுகாப்பு வேலி விரிவுபடுத்தப் பட்டது.

பிரித்தானிய தமிழர் ஒன்றியத்துடன் இணைந்து பிரித்தானிய இளையோர் அமைப்பு, தெற்காசிய ஒற்றுமை அமைப்பு, சமாதானத்துக்கான ஒற்றுமை அமைப்பு, சோசலிச கட்சி, அனைத்துலக சோசலிச அமைப்பு, ஸ்ரீலங்கா இடதுசாரி அமைப் பான சமசமாஜக் கட்சியின் லண்டன் கிளை ஆகிய ஏழு அமைப்புக்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தன. (அ)

## இன்றைய ஆட்டம்

மந்திகை, ஜூன்11

மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்டுவரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 3மணிக்கு அல்வாய் கலைமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதுகின்றது.

நாளை பி.ப. 3மணிக்கு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. (1-218)

## ஓய்வூதியக் கொடுப்பனவு

அரச ஓய்வூதியர்களின் ஜூன் மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பன்வு நாளை வியாழக்கிழமை அவர்களுக்குரிய வங்கிகள் மூலம் வழங்கப்படவுள்ளன. (1-51)

## எமது பகுதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் நோர்வேத் தரப்பினரை ஸ்ரீலங்கா அரசாங்கம் அனுமதிக்க மறுக்கிறது. நோர்வே அனுசரணையாளர்களை ஸ்ரீலங்கா அரசாங் கம் தடுக்கின்றது. வடபகுதி முன்னரங்க நிலைகளில் உக்கிரமான மோதல்கள் நிகழ்ந்து வருகின் றன. ஸ்ரீலங்காப் படையினருக்கு பெரும எவு இழப்புக்களை நாம் ஏற்படுத்தியிருக் கிறோம்.

ஸ்ரீலங்காப் படையினர் பெரும் உயிர் இழப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குள் ஓர் அங்குலம் தானும் காலடி வைத்தால் பெரும் இழப்புக்களைச் சந்திக்க நேரிடும்.

ஸ்ரீலங்காப் படையினரது தொடர்ச்சி யான வான் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் எறிகணை வீச்சுக்களால் மன்னார் மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில்பெரும்தொகையானமக்கள்இடம்பெயர்ந்து வருகின் றனர்.

மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து ஸ்ரீலங்கா படையினர் எறிகணை மற்றும் மோட்டார்த் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

வட பகுதியில் ஸ்ரீலங்காப் படையி னரின் அண்மைய முன்நகர்வு நடவடிக் கைகளால் 20,000 தமிழ் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்- என்று தெரிவித்துள்ளார். (அ)

## அதிபர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அமைச்சின் கேட்போர் கூடத் தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள் பற்றி ஆராயும் கலந்துரையாடல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலுள்ள சம்பளங்கள் ஆணைக்குழுவின் காரியாலத்தில் நேற்று இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகள், கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் சம்பளங்கள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அடுத்த மூன்று மாதத்துக்குள் இந்தச் சம்பள முரண்பாடுகள் குறித்த இறுதித்தீர்மானம் எடுக்கப்படும் எனும் விடயத்தில் கூட்டத்தில் கலந்து கொண்ட சகலதரப்பினரும் உடன்பட்டனர். எனினும், தொழிற்சங்கங்கள் ஏற்பாடு செய்த பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை இன்றும் நாளையும் திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் தெரிவித்தனர்.

இருப்பினும் நேற்று இடம்பெற்ற சம்பள முரண்பாடுகள் தொடர்பான கூட்டத்தில் சம்பள அதிகரிப்புத் தொடர்பான இறுதித்தீர்மானங்கள் எதுவும் எட்டப்படவில்லை. இது குறித்த தீர்மானம் எடுப்பதற்கென்றே சம்பளங்கள் மற்றும் சேவைகள் ஆணைக்குழுவும் அமைப்பு இயங்குகிறது. இந்த அமைப்பே இது பற்றிய இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

இந்தச் சம்பள முரண்பாடுகள் அமைச்சுடன் மாத்திரம் தொடர்புபட்டதாயின் அதனை சில மணித்தியாலங்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவந்திருக்கலாம். இது பல நிறுவனங்களுடன் தொடர்புபட்டது. ஏனைய அரச சேவையில் உள்ளவர்களின் சம்பள அளவுத்திட்டங்களுடனும் இது ஒப்புநோக்கப்பட வேண்டும். இந்த முரண்பாடுகள் பேச்சுகளின் மூலம் தீர்க்கப்பட வேண்டியவை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (சி)

மாணவர்களே...!
களனி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட பட்ட மற்றும் பட்டமேற்படிப்பை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்
UK Student visa
September 2008 கல்வி ஆண்டு, மாணவர்களுக்கான பதிவுகள் எமது நிறுவனத்தில் மேற்கொள்ளப்படுகின்றன
இன்றே நாடுங்கள்...
Part time Job: Students are allowed to work up to 20 Hours per week during term time, any number of hours during vacations.
Undergraduate Courses
BSc (Hons) in computing
BSc (Hons) in Business Information Technology
BA (Hons) Accounting and Financial Management
BA (Hons) Business Management
Postgraduate Courses
Postgraduate Diploma in Distributed Computing Systems/ Msc, Postgraduate Diploma in Computing/ Msc, Postgraduate Diploma in Internet Technology and e-commerce/ Msc Postgraduate Diploma in Computer System & Networking, Masters in Busines Administration- MBA, Executive Masters in Business AdministrationEMBA
northumbria UNIVERSITY
University of Portsmouth
IDM
இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக்கல்லூரி
216 நாவலர் வீதி யாழ்ப்பாணம். 021-2229901

## தென்மராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதே வேளை திடீரென விமானங்கள் வந்ததால் படையினரும் வெளியே வந்து முன் எச்சரிக்கையுடன் காணப்பட்டனர்.

முகமாலையில் விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது நேற்றுக்காலை 8 மணியளவிலும் பின்னர் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவிலும் விமானப்படையினரின் ஜெற் விமானங்கள் குண்டுவீச் சுத் தாக்குதல்களை நடத்தின என்று படைத் தரப்பு தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில்உள்ளவிடுதலைப்புலிகளின் பதுங்குகுழிகள் மீதே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-207-51)

## அரச பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்தை அரசு எடுத்திருக்கின்றது.

ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு சமுகமளிக்காவிட்டால் மாணவர்களின் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படும் என்பதாலேயே அரச பாடசாலைகள் இன்றும், நாளையும் மூடப்பட்டிருக்கின்றன என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த நேற்று தாம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஆசிரியர்கள் வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டாலும் இன்றும், நாளையும் அரச பாடசாலைகள் இயங்கும் என்று கல்வி அமைச்சு முன்னர் அறிவித்திருந்தது.

ஆனால்,திடீரென்று தனது முடிவை மாற்றி அரச பாடசாலைகள் இன்றும், நாளையும் இயங்கமாட்டாது என்று அரசு நேற்று அறிவித்திருக்கின்றது. (சி)

## தென்னிலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளது.

### விமானத்தாக்குதல் உடன் நிறுத்தப்பட வேண்டும்

அப்பாவித் தமிழ்ப் பொது மக்கள் மீதான விமானத்தாக்குதல்களும் ஆழ ஊடுருவி மேற்கொள்ளப்படும் தாக்குதல்களும் உடன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லாளன் படை ஏன் இவ்வாறான தாக்குதலை மேற்கொள்கின்றது என்பது குறித்து சிங்கள மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் எல்லாளன் படை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்வதை முதலில் நிறுத்துமாறு அரசுக்கு சிங்கள சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அந்தப் படை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மே 23 ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற மூன்று ஆழ ஊடுருவும் படையணித் தாக்குதல்கள் மற்றும் விமானத்தாக்குதலில் 23 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எல்லாளன் படையின் இந்தக் குற்றச்சாட்டை இராணுவம் நிராகரித்துள்ளது.

"எமது ஆழ ஊடுருவும் படையணியினர் ஒருபோதும் அப்பாவிப் பொதுமக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதில்லை. ஆயுதங்களுடன் நடமாடும் விடுதலைப்புலி உறுப்பினர்களையே தாக்குகின்றனர். "- என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எல்லாளன் படை விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ள குழுவெனத் தெரிவித்துள்ள அவர், அவர்கள் எப்படியாவது பொதுமக்களைத் தாக்க விரும்புகின்றனர். பொதுமக்களைத் தூண்டி சர்வதேச கவனத்தை ஈர்க்க விரும்புகின்றனர். - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## யாழ்.கரையோரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்ந்தன என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதனால் குருநகர் இறங்கு துறைக்கு சமீ பாக வாழ்ந்த மக்கள் அச்சம் காரணமாக வேறு பகுதிகளுக்குஇடம்பெயர்ந்தனர். (அ-1-51)

## பிரிட்டிஷ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுநலவாயத்தின் செயலாளர் நாயகம் சிறிகமலேஷ் சர்மாவினால் வழங்கப்பட்ட இரவு விருந்துபசார நிகழ்விலும் ஜனாதிபதி கலந்து கொண்டுள்ளார்.

இதேவேளை,ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரிட்டனின் எதிர்கட்சித் தலைவர் டேவிட் கமரூனையும் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்களையும் ஜனநாயக நாடு பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்காக எடுத்துவரும் முயற்சிகளையும் தாம் புரிந்து கொள்கிறார் எனவும், அதற்கு எவ்வாறு உதவலாம் எனத் தாம் சிந்தித்து வருகிறார் எனவும் டேவிட் கமரூன் குறிப்பிட்டார் எனக் கூறப்பட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கிழக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்தவும், மோதலால் பாதிக்கப்பட்ட சகல சமூக மக்களையும் வலுப்படுத்தவும் தாம் முன்னெடுத்துள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இச்சந்திப்பின்போது எடுத்துரைத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் புதிய முதலமைச்சர் முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினராகவிருந்து, பின்னர் வன்முறையை கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்திற்குத் திரும்பியவர் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார் எனக் கூறப்பட்டது.

வடபகுதியை பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து மீட்டு, அந்தப் பகுதி மக்களும் பன்முகத்தன்மையுடன் கூடிய ஜனநாயகத்தையும் துரித பொருளாதார அபிவிருத்தியையும் அமைக்க வழி செய்வதே தனது நோக்கம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இச்சந்திப்பின்போது குறிப்பிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.(உ)

## தமிழ்பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்புள்ள பிரதான வைத்தியசாலையில் கைதுசெய்துள்ளனர் என அந்த டாக்டரின் தாயார் வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்ப பயிற்சி பிரதி அமைச்சர் பெ. இராதாகிருஸ்ணனிடம் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகவல் அமைச்சரின் ஊடகப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு-

செல்வி. ஜனா விக்னேஸ்வரன் (வயது-30) என்ற இளம் டாக்டரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு கண்டி இரகசியப் பொலிஸ் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார்.

இக்கைது தொடர்பாக தம்புள்ள வைத்தியசாலை பிரதான டாக்டர் சுதர்சன உறுதிசெய்துள்ளதுடன், தங்குவதற்கு இடமில்லாமல் கடந்த ஒன்றரை ஆண்டுகாலமாக தம்புள்ளையில் தொழில் புரிந்த டாக்டர் ஜனாவுக்கு தனது இல்லத்திலேயே இடமளித்து தங்க வைத்திருந்தார் எனவும், இப்பகுதியில் நடைபெற்ற குண்டு வெடிப்புகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸாரே இவரைக் கைது செய்துள்ளனர் எனவும் அவர் பிரதி அமைச்சரிடம் தெரிவித்தார்.

இரத்தப் பரிசோதனைப் பிரிவுக்குப் பொறுப்பான டாக்டர் செல்வி ஜனா மீது எவ்வாறு சந்தேகம் ஏற்பட்டது என்பது தெரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

கண்டி இரகசியப்பொலிஸ் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள செல்வி ஜனா தொடர்பாக இரகசியப்பொலிஸ், பிரதி பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு உயர் அதிகாரிகள் உட்பட பலருக்கு பிரதி அமைச்சர் முறைப்பாடு செய்துள்ளார். (சி)

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
12.06.2008ல்
4 நான்காவது அகவையில் 4
நாம் அடியெடுத்து வைக்கிறோம்
12.06.2008 அன்று பின்வரும் கற்கைநெறிகளுக்கு பதிவு செய்பவர்களுக்கு 20% வரை கட்டணக் கழிவு வழங்கப்படும்
20% Off
Diploma in Ms Office
Diploma in Programming Languages
Diploma In DTP
Diploma in Hardware and Networking
Diploma in Accounting Packages
Diploma in Web Designing
Diploma in ICT (Year 10)
Diploma In Graphics Design
Advanced Diploma in ICT (Year 11)
Diploma in GIT (G.C.E A/L)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org